இலவச பிரதி

Registered as a NewsPaper

விலை ரூபா : 8.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 2036 | ஆடி-04 | 20-07-2005 | புதன்கிழமை | ஓசை-152



கணேசா நகையகம்

தங்கநகை உலகில் தமக்கென தனியிடம் பதித்தவர்கள்

இல:123. பஜார் வீதி. வவுனியா. T.P.-024-2222464

இல:194. கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம். T.P.-021-2225987

(சி-12149)

## இராணுவக் கட்டுப்பாட்டுப்பகுதியில்

# புலிகளின் பாதுகாப்பை உறுதி செய்யாவிடின்

# யுத்தநிறுத்தம் ஆபத்தைச் சந்திக்கும்!

## சிறிலங்கா அரசிற்கு அமெ. உள்ளிட்ட மேற்கு நாடுகள் எச்சரிக்கை

(கொழும்பு)

**அரசாங்கக் கட்டுப்பாட்டுப்பகுதியில் ஆயுதமற்ற புலிகளின் பாதுகாப்பின்னை சிறிலங்கா அரசாங்கம் உறுதிசெய்யாவிட்டால் யுத்த நிறுத்த உடன்படிக்கையின் நடுத்தூண் ஆபத்தைச் சந்திக்க நேரிடும் எனசிறிலங்காவிற்கான அமெரிக்க தூதுவராலயம் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.**

இலங்கையில் தற்போதைய பாதுகாப்பு நிலவரம் குறித்தும் உத்தேச சமாதான திட்டங்கள் தொடர்பாகவும் ஐரோப்பிய ஒன்றியம் ஐக்கிய அமெரிக்கா, ஜப்பான் மற்றும் நோர்வே என்பன தமது அச்சத்தை வெளியிட்டுள்ளதாக இலங்கைக்கான அமெரிக்க தூதுவராலயம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த பெப்ரவரி மாதம் முதல் தொடர்சியாக இடம்பெற்றுவரும் அரச மற்றும் தமிழீழ விடுதலைப்புலிகள் மற்றும் ஏனைய தமிழ் குழுக்

(12ஆம்பக்கம் பார்க்க)

## தமிழ்ச்செல்வன்-ஹொக்லண்ட் கிளி.இல் இன்று சந்தித்து பேசுவர்

தமிழீழ அரசியல்துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை நோர்வேயின் சிறிலங்காவிற்கான பிரதித்தூதுவர் ஓட்வர் லக்ரட் போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவின் தலைவர் ஹக்ரப் ஹொக்லண்ட் ஆகியோர் இன்று கிளிநொச்சியில் சந்தித்து கலந்துரையாடவுள்ளனர்.

முற்பகல் 11.00 மணியளவில் தமிழீழ விடுதலைப்புலிகளின் சமாதான செயலகத்தில் இச்சந்திப்பு நடைபெறவுள்ளது.

போர்நிறுத்த உடன்பாட்டின் தற்போதைய நிலைமைகள் பொதுக் கட்டமைப்பின் இறுதி நிலவரம் உட்பட பல்வேறு விடயங்கள் இச்சந்திப்பில் கலந்துரையாடப்படலாம்மென தெரிவிக்கப்படுகின்றது. (தீ)

## ஓமந்தை -அரசன்குளத்தில் புதிய சோதனை நிலையம் பயணிகள் மீது சிறிலங்காப்படையினர் கெடுபிடி

(வவுனியா செய்தியாளர்)

ஏ -9 வீதியில் ஓமந்தை அரசன் குளத்தில் சிறிலங்கா படையினர் புதிய சோதனை நிலையம் ஒன்றை நேற்று அமைத்து கெடுபிடிகளை மேற்கொண்டுள்ளனர்.

ஏ- 9 வீதியில் ஓமந்தை முன்னரங்க சோதனை நிலையத்தில் இருந்து வவுனியா நோக்கி இரண்டு கிலோமீற்றர் தூரத்திலுள்ள அரசன் குளத்தில் புதிய சோதனை நிலையம் ஒன்றை அமைத்து ஏ -9 வீதியூடாகச்செல்லும் வாகனங்களை சிறிலங்காப்படை யினர் வழிமறித்து சோதனைகளை மேற்கொண்டுள்ளதுடன் வாகனங்களில் செல்லும் பொதுமக்கள் மீதும் பல்வேறு கெடுபிடிகளை மேற்கொண்டுள்ளனர்.

படையினரின் இக்கெடுபிடிகள் குறித்து ஓமந்தை பிரதேச மக்கள் விடுதலைப்புலிகளின் வவுனியா மாவட்ட அரசியல் துறைப்

(12ஆம்பக்கம் பார்க்க)

## மன்னாரில் பொதுமக்கள் மீது படையினர் தாக்குதல்

மன்னார் புகையிரதநிலைய வீதியில நேற்றுமுன்தினம் பொதுமக்கள் சிலர் படையினரால் தாக்குதலுக்குள் உள்ளானதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. இரவு 11 மணிக்கும் 12 மணிக்கும் இடையில் இந்த சம்பவம் இடம் பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் எவ்வித பொலிஸ் முறைப்பாடுகளும் செய்யப்படாத போதும் நேற்று மன்னாரில் இடம் பெற்ற பேரணியின்போது தமிழ் தேசிய பாராளுமன்ற உறுப்பினர்களிடம் முறையிடப்பட்டுள்ளது. இதேவேளை நேற்று மதியம் மன்னார் முதலாம் வட்டாரம் மற்றும் நான்காம் ஆம் வட்டார வீடுகளில் படையினர் திடீர் சோதனைகளை நடத்தியுள்ளனர். (32)

## தமிழர் உரிமையை சர்வதேசம் அங்கீகரிக்கக்கோரி வவுனியாவிலும் மாபெரும் எழுச்சி நிகழ்விற்கு ஏற்பாடு!

(வவுனியா செய்தியாளர்)

தமிழரின் உரிமையை சர்வதேசம் அங்கீகரிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி வவுனியாவில் மாபெரும் எழுச்சி நிகழ்வு ஒன்று நடைபெறவுள்ளது.

வவுனியா மாவட்ட பொதுஅமைப்புக்களின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ளஇவ் எழுச்சி நிகழ்வு தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நேற்று பிற்பகல் நான்கு மணிக்கு வவுனியா மாவட்ட அரசியல்துறைச் செயலகத்தில் நடைபெற்றது. இதில் தமிழீழ தேசிய எழுச்சிப் பேரவைப் பொறுப்பாளர் சஞ்சய், வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் ஞானம், வவுனியா மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் அலை ஆகியோர் உட்பட வவுனியா மாவட்ட பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். (10)

## ஆகஸ். நடுப்பகுதியில் மக்கள் எழுச்சிநாள் கிளி. தேசிய எழுச்சிப் பேரவை ஏற்பாடு

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்டத்தில் தமிழ்த்தேசிய எழுச்சியை உண்டுபண்ணுதல் என்னும் நோக்குடன் தேசிய எழுச்சிப் பேரவையின் ஏற்பாட்டில் மக்கள் எழுச்சிநாள் அடுத்தமாதம் நடுப்பகுதியில் கிளிநொச்சி மாவட்டத்தில் நடாத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதற்கான ஆரம்பகட்ட கலந்துரையாடல் ஒன்று நேற்று கிளிநொச்சி அரசசார்பற்ற நிறுவனங்களின் இணைய கேட்போர் கூடத்தில் கிளிநொச்சி மாவட்ட தேசிய எழுச்சிப்பேரவை செயலாளர் பசுபதிப்பிள்ளை தலைமையில் நடைபெற்றது.

"தமிழ்த்தேசிய பேரெழுச்சியை உண்டு பண்ணுதல், தமிழ்மக்களின் இன்றைய

(12ஆம் பக்கம் பார்க்க)

## சட்டவிரோத சொத்துச் சேர்ப்பு வழக்கு எஸ். பி. திசாநாயக்க விடுதலை!

சட்டவிரோதமாகச் சொத்துக்கள் சேர்த்ததாக முன்னாள் அமைச்சர் எஸ். பி. திசாநாயக்க மீது தொடரப்பட்ட வழக்கில் அவர் நிரபராதி எனத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

290 இலட்ச ரூபா பெறுமதியான சொத்துக்களை சட்டவிரோதமாகச் சேர்த்துள்ளார் என முன்னாள் அமைச்சர் எஸ். பி. திஸாநாயக்க மீது இலஞ்ச ஊழல் ஆணைக்குழு வழக்குத் தொடர்ந்திருந்தது.

இந்த வழக்கில் சுமத்தப்பட்டிருந்த குற்றச்சாட்டுக்களை இலஞ்ச ஊழல் ஆணைக்குழு உரிய வகையில் நிரூபிக்காததுடன் அந்தச்சொத்துக்களை தான் சட்டத்திற்கு உட்பட்டவகையிலேயே சம்பாதித்ததாக முன்னாள் அமைச்சர் எஸ் பி. திஸாநாயக்க நிரூபித்திருந்தார்.

இதனால் முன்னாள் அமைச்சர் மீதான குற்றச்சாட்டுக்களை உரிய வகையில் நிரூபிக்காமையினால் அவரை நிரபராதி எனத் தீர்ப்பளித்து இந்த வழக்கிலிருந்தது விடுதலை செய்வதாகக் கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ரோகினி பெரேரா தீர்ப்பளித்துள்ளார்.

(12ஆம்பக்கம் பார்க்க)

## கைப்பற்றப்பட்ட குண்டுகள் ஐரோப்பிய தயாரிப்பாம்

கடந்த சனிக்கிழமை இரவு மன்னாரில் கைப்பற்றப்பட்ட கிளைமோர் குண்டுகளைப் பரீட்சித்ததில் அவை ஐரோப்பிய நாட்டுத்தயாரிப்பு என கண்டுபிடிக்கக்கப்பட்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

கிழக்கு மாகாண பிரதி பொலிஸ்மா அதிபர் மகிந்த பண்டார பெத்தவலவின் பணிப்பிற்கமைய கைப்பற்றப்பட்ட கிளைமோர் குண்டுகளை நேற்று முன்தினம் இராணுவத்தின் குண்டுகளைச் செயலிழக்கச் செய்யும் பிரிவினர் வந்து பரிசோதனை செய்ததில் இவை ஐரோப்பிய நாட்டுத் தயாரிப்பு என்பதனை உறுதிப் படுத்தினர்.


(12ஆம்பக்கம் பார்க்க)

## வேகமாகப் பயணித்த வாகனம் கட்டுப்பாட்டை இழந்து தடம் புரண்டது

(அலுவலக செய்தியாளர்)

ஏ-9 பிரதான வீதியில் வேகமாகப் பயணித்துக்கொண்டிருந்த வாகனம் கட்டுப்பாட்டை இழந்து நடுவீதியில் தடம் புரண்ட சம்பவம் நேற்று இடம் பெற்றுள்ளது.

நேற்று நண்பகல் 12.50 மணியளவில் ஏ-9 நெடுஞ்சாலையில் பரந்தன் சந்திக்கும் கரடிப் போக்குச்சந்திக்கும் இடையில் அமைந்துள்ள சிறிலங்கா தொலைபேசி பரிவத்தனை நிலையத்துக்கு அருகில் இவ்



(படம் லோகீசன்)

(12ஆம் பக்கம் பார்க்க)

## S.L.A.S போட்டிப்பரீட்சை

வகுப்புகள் நடைபெறுகின்றன. சனி 3-6 மணி, ஞாயிறு 8-11மணி, பொது அறிவு, பொதுவிவேகம் த.தவசேகர் (B.sc,P.G.D.E ) கட்டுரையும் சுருக்கமும்- பா மகாலிங்க சிவம் B.A(Hons) இடம்:-(D.M.I யாழ் நகர்)

(சி.12373)

## கண்ணீர் அஞ்சலி

### அமரர். தர்மராசா பரமேஸ்வரி

எமது கழக அங்கத்தவர்களான க.துஷ்யந்தன், க.செந்தன் அவர்களின் தாயார் அமரர் தர்மராசா பரமேஸ்வரி அவர்களுக்கு எமது அஞ்சலிகளைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தகவல்:-
நண்பர்கள்,
விளையாட்டுக் கழகம்,
உடையார்கட்டு.

(சி.12374)

## 7 ஆவது மாத இதய அஞ்சலி

"சமாதானத்தின் இளைப்பாறக்கடவது"

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 21 |  | 16 |
| 02 | | 12 |
| 1935 | | 2004 |

### அமரர். திருமதி கிறகோரி மருத்தீனா(பொன்னு)

"நினையாத நேரத்தில்
எமை விட்டுச் சென்று விட்டாய்
விழி மூடும் நேரம் எல்லாம்
நினைவினிலே நீ வருவாய்"

இவரின் ஆத்ம சாந்திக்காக காத்தாங்குளம் புனித சூசையப்பர் ஆலயத்தில் 20. 07. 2005 புதன்கிழமை இன்று மாலை 6. 00 மணிக்கு நடைபெறும் திருப்பலியில் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

ஆலங்குளம்,
வட்டக்கண்டல்.

தகவல் :-
கணவர்,
பிள்ளைகள்,
மருமக்கள்.

(சி.12372)

## SRI LANKA RED CROSS SOCIETY
### Kilinochchi Branch

Seeks to fill the following positions for projects it implements jointly with the Austrian & Swiss Red Cross Consortium and the International Federation of the Red Cross and Red Crescent Societies:

**1) FIELD OFFICER**

**Qualifications:**
- Passed in GCE (A/L)Examination
- Fluent English
- Mature personality who takes initiative and is able to work independently
- Experience working with internationalOrganizations
- Experience working with authorities and /or communities

**Responsibilities:**
- Assist the Austrian/Swiss Red Cross Delegate in the overall coordination and execution of the project
- Liaison with authorities and communities
- Supervision of community surveys
- Preparation of reports
- Administrative work related to the project
- Reporting directly to the Austrian/Swiss Red Cross Delegate in Kilinochchi

**Duty Station: Kilinochchi**

**2) ADMINISTRATIVE and ACCOUNTING OFFICER**

**Qualifications:**
- Passed in GCE (A/L) Examination
- Fluent English
- Mature personality who takes initiative and works independently
- Experience working with International Organizations

**Responsibilities:**
- in charge of all clerical work at the office
- in charge of accounting
- Reporting directly to the Austrian/Swiss Red Cross Delegate in Kilinochchi

**Duty Station: Kilinochchi**

**3) DRIVER**

**Qualifications:**
- Fluent English
- Experience driving 4WD
- Mature personality who takes initiative
- Experience working with international Organizations

**Responsibilities:**
- Responsible for vehicle condition and equipment
- In charge of administrative work for the vehicle
- Occasional trips outside the Vanni, including Colombo
- Assisting the field officer in procurement
- Reporting directly to the Austrian/Swiss Red Cross Delegate in Kilinochchi

**Duty Station: Kilinochchi**

Salaries for all positions will be discussed during the interviews.

Applications should be reached on or before 25 th of July 2005 to the following address. Chairman/ Secretary, Sri Lanka Red Cross Society, Kannan Temple Road,Kilinochchi

**K. Ganes,**
**Hony, Secretary,**
**Sri Lanka Red Cross Society,**
**Kilinochchi branch.**

(சி.12371)

## மாபெரும் ஏல விற்பனை
### 2005.07.24

**எமது களஞ்சிய இருப்புக்களைத் துரிதமாக வெளியேற்றுவதற்கு 2005.07.24 ஆம் நாள் மு.ப 10.00 மணிக்கு கிளி/மத்தியகல்லூரிக்கு முன்பாக அமைந்துள்ள வளாகத்தில் ஏல விற்பனை நடைபெறும்.**

**பொருள் விரிப்பு**
- இலத்திரனியற் பொருள்கள்
- மின்னியற் பொருள்கள்
- புடைவை வகைகள்
- ஊர்தி உதிரிப்பாகங்கள்
- அழகு சாதனப் பொருள்கள்
- இன்னும் பல்வகைப் பொருள்கள்

**இப்பொருள்களை 2005.07.21 ஆம் நாளிலிருந்து 2005.07.23 ஆம் நாள் வரை ஏல விற்பனை நடைபெறும் கட்டடத்தில் பார்வையிட முடியும்.**

**கவனிப்புக்கு**
- ஏலவிற்பனையில் பங்கு கொள்வோர் உருபா ஐம்பது (50.00) செலுத்தி நுழைவு அனுமதி பெறுதல் வேண்டும்.
- ஏலத்தில் பொருள் பெறுபவர் முழுப்பெறுமதியினையும் செலுத்தி உடனும் பொருள்களை அகற்றுதல் வேண்டும்.
- முழுப்பெறுமதியினையும் உடன் செலுத்த முடியாதோர் 50வீதத்திற்குக் குறையாத தொகையைச் செலுத்தி மூன்று (03) நாள்களுக்குள் மீதித்தொகையைச் செலுத்திப் பொருள்களை அகற்றுதல் வேண்டும்.
- ஏலத்தில் பங்கு கொள்வோர் தமக்கிடையில் மறைமுக இலாபம்கருதி பேரம் பேசுதல், உடன்படிக்கை செய்தல் பங்கு கொள்வோரைத் தகைமை இழக்கச் செய்யும்.

(சி.12342)


யாழ்ப்பாணம்

# காஷ்மீர் பிரச்சினைக்கு தீர்வு காண அமெரிக்கா உதவத் தயாராகவுள்ளது

## இந்தியப் பிரதமரிடம் அமெரிக்க சனாதிபதி உறுதி

(வோஷிங்டன்)

**காஷ்மீர் பிரச்சினையில் தீர்வு காண அமெரிக்கா உதவத் தயார். ஆனால் காஷ்மீர் பிரச்சினையில் அமெரிக்கா ஒரு போதும் தலையிடாது என்று அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் புஷ் இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்கிடம் உறுதியளித்துள்ளார்.**



மூன்று நாள் பயணமாக இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் தனது மனைவியுடன் அமெரிக்கா சென்றுள்ளார். வோஷிங்டனில் தங்கியிருக்கும் மன்மோகன் சிங் நேற்று முன்தினம் வெள்ளை மாளிகையில் அதிபர் ஜோர்ஜ் புஷ்ஷை சந்தித்துப் பேசினார்.

அப்போது எரிசக்தி, தொழில்நுட்பம், தீவிரவாத ஒழிப்பு ஆகியவற்றில் இணைந்து செயற்படுவது குறித்து அவர்கள் பேசினார்கள்.

அணுசக்திதுறை, பொருளாதார ஒத்துழைப்பு உட்பட 16 துறைகளில் இரு நாடுகளுக்கும் இடையே ஒப்பந்தம் ஏற்பட்டது. இதையடுத்து இருவரும் கூட்டுப் பிரகடனம் வெளியிட்டனர்.

நேற்று முன்தினம் இரவு மன்மோகன்சிங்குக்கு தனது மாளிகையில் ஜோர்ஜ் புஷ் விருந்து கொடுத்தார். முன்னதாக நடந்த நிகழ்சியில் ஜோர்ஜ் புஷ் பேசும் போது காஷ்மீர் பிரச்சினையில் இந்தியாவும், பாகிஸ்தானும் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண வேண்டும். இரு நாடுகளுக்கும இடையே சமரச முயற்சியில் முன்னேற்றம் ஏற்பட்டு வருவது மகிழ்ச்சி அளிக்கிறது. காஷ்மீர் பிரச்சினையில் தீர்வுகாண அமெரிக்கா உதவத் தயார் ஆனால் காஷ்மீர் பிரச்சினையல் அமெரிக்கா ஒருபோதும் தலையிடாது என்றார். இந்தியா வரும்படிமன்மோகன் சிங் விடுத்த அழைப்பையும் புஷ் ஏற்றுக்கொண்டார்.

# ஸ்பெயின் நாட்டில் காட்டுத் தீ; 14 தீயணைப்பு வீரர்கள் உடல் கருகிப்பலி

(மட்ரிட்)

ஸ்பெயின் நாட்டில் காட்டுத் தீயை அணைக்க முயன்ற போது தீ அணைக்கும் படையைச் சேர்ந்த 14 பேர் உடல் கருகிப்பலியாகியுள்ளனர்.

ஸ்பெயின் நாட்டின் மத்திய பகுதியில், கவுடலஜாரா பகுதியிலுள்ள காட்டுப்பகுதியில், தீப்பிடித்தது. 17 கிலோமீற்றர் பரப்புக்கு தீ பரவியது. இந்தத் தீ 40 மீற்றர் உயரத்துக்கு கொழுந்து விட்டு எரிந்தது.

சுற்றுலாப் பயணிகள் அந்தப் பகுதியில் உணவு தயாரிப்பதற்காக மூட்டிய தீயை சரியாக அணைக்காமல் விட்டதால் இது காற்றில் பரவி பல ஏக்கர் நிலப்பரப்பிலுள்ள வனப்பகுதிகளில் பற்றிக்கொண்டது.

சனிக்கிழமை பற்றிய தீ தொடர்ந்து எரிந்து வருகிறது. தீயை அணைப்பதற்காக தீ அணைக்கும் படையினர் வரவழைக்கப்பட்டனர்.



தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டிருந்த 14 தீ அணைக்கும் படையினர் உடல்கருகிப்பலியாகினர். இரண்டு தீ அணைக்கும் வண்டிகளும் தீயில் கருகி சேதமடைந்தன. இந்த தீ விபத்து காரணமாக பல ஆயிரம் கெக்ரேயர் நிலப் பரப்பிலுள்ள பைன் மரங்கள் கருகி நாசமாகின. தீயில் கருகிய 14 தீ அணைப்பு வீரர்களில் பெண்களும் உள்ளனர். அவர்கள் அனைவரும் 29 வயதிற்குட்பட்டவர்கள் ஆவார்கள்.

துணைப்பிரதமர் மரியாதெரசா பெர்ணான்டஸ் டி டிலாவேகா தீப் பிடித்து எரியும் இடத்திற்கு சென்றுள்ளார். அவரைப் பார்த்ததும் அந்தப்பகுதி மக்கள் எதிர்ப்புக்குரல் எழுப்பினர். தீயைஅணைக்க போதுமான வசதிகள் தேவை கூடுதல் தீ அணைப்பு வண்டிகள் தேவை எனக் குரல் எழுப்பினர். தீப்பற்றி எரிந்த பகுதியையொட்டியுள்ள கிராமங்களில் வசித்தவர்கள் அங்கிருந்து அப்புறப்படுத்தப்பட்டனர். 1940 ஆம் ஆண்டிற்குப் பின்பு இப்போது தான் முதல்முறையாக கடும் வரட்சியையும் அனல் காற்றையும் சந்தித்து வருவதால் ஸ்பெயினில் பல இடங்கள் தீப் பிடித்து எரிந்து வருகிறது.

# லண்டன் குண்டுவெடிப்பில் தொடர்புபட்டவர்கள் அமெரிக்காவுக்கு அடிக்கடி விஜயம் செய்துள்ளனராம்

(லண்டன்)

லண்டனில் நடைபெற்ற தொடர் குண்டுவெடிப்பில் சம்பந்தப்பட்டவர்கள் எனக்கருதப்படும் நால்வரில் மூன்று பேர் அமெரிக்காவுக்கு அடிக்கடி விஜயம் செய்திருப்பது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

புலனாய்வு விசாரணைகளின்படி ஹசிப் ஹூசைன் என்பவர் அண்மையில் பாகிஸ்தான் வந்திருப்பதாகவும் ஆனால் அவர் எவ்வள்வு காலம் அங்கு தங்கியிருந்தார் என்பது புரியவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இம்மூவரும் இங்கிலாந்தில் குடியுரிமை பெற்ற பாகிஸ்தானியர்கள் எனக்கூறும் புலனாய்வுத் துறை, அவர்களே பிரிட்டனில் முதலாவது தற்கொலைக் குண்டுதாரிகள் என்றும் தெரிவித்துள்ளது.

தாக்குதல் தாரிகளான மொகமட் சித்திக்கான், ஷேசாத் டன்வீர் இருவரும் கடந்த 2004 ஆம் ஆண்டு 19 ஆம் திகதி துருக்கி விமானத்தின் மூலம் பாகிஸ்தான் வந்து 2005 பெப்ரவரி மாதம் துருக்கி விமானம் மூலம் லண்டன் திரும்பியுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

ஆயினும் அவர்கள் ஏன் வந்தார்கள். எவ்வளவு நாட்கள் தங்கியிருந்தார்கள், என்பதற்கான ஆதாரங்கள் கிடைக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. டன்வீர் லாகூருக்கும் பைஸலபாத்துக்கும் சென்றிருக்கிறார்.



ஜமேக்காவில் அண்மையில் நான்கு பேரை பலிகொண்ட சூறாவளி நேற்று முன்தினம் மெக்சிக்கோ கடற்கரைநோக்கி வீசியபோது அதிலிருந்து தப்பப் போராடும் மெக்சிக்கோ பொலிசார் ஒருவரையும், குழந்தை ஒன்றை பாதுகாப்பாக பேருந்துக்குள் எடுத்துச்செல்வதையும் படங்களில் காணலாம்.

# ஆப்கான் முன்னாள் இராணுவத் தளபதிக்கு ஆட்களை கடத்தியதற்காக தண்டனை

(லண்டன்)

ஆட்களை கடத்திச் சென்று பணயக்கைதிளாக வைத்து பெரும் நாடகம் நடத்திய ஆப்கானிஸ்தானின் முன்னாள் இராணுவத் தளபதியொருவருக்கு தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

பர்யாடி சர்தாத் என்ற 42 வயது இராணுவத் தளபதி இங்கிலாந்தில் 1991 முதல் 1996 வரையான காலப் பகுதியில் காபூல்சாலை சோதனைச் சாவடியில் கடமையிலிருந்த சமயம் இரகசியமாக கைது செய்து சித்திரவ[illegible]தகளின் [illegible]ன் பிணையாள[illegible]ளாக வைத்து [illegible] சம்பாதித்துள்ளார். இதனையறிந்த அரசாங்கம் இவரை கைது செய்தது.

பின்னர் இவரின் வழக்கை விசாரணை செய்த இங்கிலாந்து நீதிபதிகளின் குழு இவரை குற்றவாளியென தீர்ப்பளித்து ஆயுள்தண்டனை விதித்துள்ளது. இவர் நீதியற்ற வகையில் குற்றம் புரிந்துள்ள இராணுவ வீரர் என்பதால் இவரின் வழக்கை இங்கிலாந்து அரசு விசாரணை செய்ததாகத் தெரிவிக்கப் படுகிறது. இவர் பணியாற்றியபோது ஒரு நாயை வளர்த்ததாகவும் கைது செய்யப்படுபவர்களை நாயை ஏவி [illegible]விடுபவர் என்றும் கூறப்படுகிறது.



பாக்தாத்துக்கு 40 மைல் தொலைவிலுள்ள முஸாயிப் என்ற இடத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை தற்கொலைக் குண்டுத்தாக்குதல் நடந்த இடத்தை கண்காணிக்கும் ஈராக்கிய பொலிசாரும், கூடியிருக்கும் மக்களும் (சம்பவத்தில் 60பேர் வரை பலியானதாகக் கூறப்படுகிறது)

# ஆராய்ச்சிக்காக செவ்வாய்க்கிரகத்திற்கு கிருமிகள் அனுப்பி வைக்கப்பட்டன

(வோஷிங்டன்)

ஆராய்ச்சிக்காக செவ்வாய்க் கிரகத்துக்கு ரொக்கெட்டில் கிருமிகள் அனுப்பி வைக்கப்பட்டதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

இதுவரை நடைபெற்ற ஆராய்ச்சிகளில், பூமியைத் தவிர மற்றக் கிரகங்களில் உயிரினங்கள் வசிப்பதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பதாகத் தெரியவில்லை. செவ்வாய்க் கிரகத்தின் சில அடிப்படை தன்மைகளை விஞ்ஞானிகள் ஆராய்ந்த போது, அங்கு ஒரு காலத்தில் தண்ணீர் இருந்திருக்கக்கூடும் என்றும் மேலும் செவ்வாய்க்கிரகத்தின் துருவப்பகுதிகளில் பனிப் பாறைகள் இருப்பதற்கான அடையாளங்கள் தென்படுவதாகவும் தெரியவந்தது.

தண்ணீரும், காற்றும் இருந்தால் அங்கு உயிர்கள் வாழ முடியும் என்பதால் செவ்வாய்க் கிரகத்தை பற்றிய ஆராய்ச்சியில் அமெரிக்காவின் 'நாசா' விண் வெளி ஆராய்ச்சி நிறுவன விஞ்ஞானிகள் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர்.

செவ்வாய்க்கிரகத்தில் உயிரினங்கள் வசிக்க முடியுமா? அதற்கான சூழ்நிலைகள் அங்கு உள்ளதா? என்பது பற்றி ஆராய்வதற்காக 'நாசா' விண்வெளி நிறுவனம் இங்கு ரொக்கெட் ஒன்றை அனுப்பி வைத்தது. அந்த ரொக்கெட்டுடன் இணைக்கப்பட்டு இருந்த 'ஆப்பர் சூனிட்டி' என்ற விண்வெளி ஓடம் கடந்த ஆண்டு செவ்வாய்க் கிரகத்தில் தரை இறங்கியது. ஆராய்ச்சிக்காக விண்வெளி ஓடத்தில் விஞ்ஞானிகள் பசில்லஸ் சாபென்சிஸ் என்ற கிருமிகளையும் அனுப்பி வைத்து இருக்கிறார்கள்.

இந்தத் தகவலை 'நாசாவின் விண் உயிரியல் விஞ்ஞானியான கஸ்தூரி வெங்கடேஸ்வரன் இப்போது தெரிவித்துள்ளார். தமிழ் நாட்டைச் சேர்ந்த இவர் அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் படித்தவர். அமெரிக்காவில் பசடேன என்ற இடத்திலுள்ள 'நாசா' வின் ரொக்கெட் ஒருங்கிணைப்பு நிறுவனத்தில் பணியாற்றி வருகிறார்.

ரொக்கெட்டில் பயணம் செய்த போதும் விண்வெளி ஓடம் செவ்வாய்க் கிரகத்தில் தரை இறங்கிய போதும் அதில் இருந்து கிருமிகள் உயிருடன் இருந்திருக்கக்கூடும் என்றும் அவர் தெரிவித்தார். செவ்வாய்க் கிரகத்தின் வெப்பநிலை மைனஸ் 60 பாகை செல்சியஸ் ஆகும். மிக குளிர்ச்சியான அந்த வெப்பநிலையிலும் கிருமிகள் உயிர் வாழக்கூடும் என்று கருதப்படுகின்றது. இந்த ஆராய்ச்சியின் மூலம் செவ்வாய்க் கிரகத்தைப் பற்றி சில புதிய தகவல்கள் கிடைக்குமென விஞ்ஞானிகள் எதிர்பார்க்கிறார்கள்.

# வடகொரிய பாராளுமன்ற உறுப்பினர் தென்கொரியாவில் தஞ்சம் புகுந்தார்


(சியோல்)

வடகொரிய பாராளுமன்றத்தில் 687 உறுப்பினர்கள் இருக்கிறார்கள். அவர்களில் ஒருவரான 72 வயது உறுப்பினர் மூன்றாவது நாடு வழியாக தென்கொரியா சென்றடைந்தார். அங்கு அவர் அடைக்கலம் கோரியுள்ளார்.

அவர் நிருபர்களிடம் கூறுகையில், "ஒரு தொன் எடையுள்ள அணு ஆயுதத்தை வடகொரியா தயாரித்துள்ளது. 50 கிலோ எடை அளவுக்கு அணு ஆயுதங்களை அது தயாரிக்க முயற்சி செய்து வருகிறது. ஏவுகணைகள் மூலம் எடுத்துச்செல்லக் கூடிய அளவுக்கான அணு ஆயுதங்களை தயாரிக்க விஞ்ஞானிகள் முயற்சி செய்து வருகிறார்கள்" என்று குறிப்பிட்டார்.

# காவல்துறையின் சீர்திருத்தப்பிரிவிற்கு ச.செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதிகள் விஜயம்

## – கைதிகளையும் பார்வையிட்டு கலந்துரையாடினர்



(அலுவலக செய்தியாளர்)

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் கிளிநொச்சி கனகபுரத்திலுள்ள தமிழீழ காவல்துறையினரின் சீர்திருத்தப்பிரிவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளை பார்வையிட்டு கலந்துரையாடியுள்ளனர்.

சீர்திருத்தப்பிரிவுப் பொறுப்பாளர் சசிதரன் தலைமையில் நடைபெற்ற மேற்படி கலந்துரையாடலில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் தரப்பில் அகவின் மற்றும் டங்கன் ஆகியோர் கைதிகளுடன் கலந்துரையாடியுள்ளனர்.

அக்கலந்துரையாடலின்போது தடுப்புக்காவலிலுள்ள கைதிகள் எவ்வித பிரச்சினைகளும் இன்றி பராமரிக்கப்படுவதையிட்டு தமிழீழ காவல்துறையினருக்கு நன்றி, பாராட்டுக்களையும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

அண்மையில் நடைபெற்ற மேற்படி கலந்துரையாடலில் தலைமைக்காவலர்களான சுப்பிரமணியம், சிறிதரன் ஆகியோரும் கலந்து கொண்டனர். (கு)

# குழியில் தவறி வீழ்ந்த குழந்தை நீரில் மூழ்கி மரணம்

(அலுவலக செய்தியாளர்)

வீட்டிற்கருகாமையில் இருந்த நீர் நிறைந்த குழியில் தவறி வீழ்ந்து குழந்தை ஒன்று மரணமடைந்துள்ளது.

மேற்படி சம்பவம் நேற்று முன்தினம் கோரக்கன்கட்டு பரந்தனில் இடம்பெற்றுள்ளது. வீட்டிற்கு அருகாமையில் மண்ணெடுத்த குழிஒன்றில் அண்மையில் பெய்த மழை நீர் தேங்கி நின்றுள்ளதெனவும், மேற்படி நீர் நிறைந்த குழியிலேயே குழந்தை தவறி வீழ்ந்து மரணமானதாகவும் தெரிய வந்துள்ளது.

கோரக்கன்கட்டு பரந்தனைச் சேர்ந்த ஆறுமுகம் தர்சன் என்ற இரண்டரை வயதுக் குழந்தையே மேற்படி சம்பவத்தில் உயிரிழந்துள்ளது. (சோ)

# தண்ணீர்த்தாங்கி அமைப்பு

(மன்னார்)

மன்னார் வங்காலை கிராமத்தில் கடலோர கிராம அபிவிருத்தி நிலையத்தினரால் உலகவங்கியின், நிதியுதவியுடன் அமைக்கப்பட்ட தண்ணீத்தாங்கி கடந்த ஞாயிற்றுக் கிழமை திறந்துவைக்கப்பட்டுள்ளது.

காலை 10.00 மணியளவில் இடம்பெற்ற நிக[illegible]வில் மேற்படி நீர்த்தாங்கிக் கட்டடத்தினை கடலோர கிராம அபிவிருத்தி நிறுவனத்தின் பணிப்பாளர் எஸ்.எம் குரூஸ் திறந்து வைத்தார். இத்திறப்பு விழாவில் மன்னார் மாவட்ட அரச அதிபர் விஸ்வலிங்கம், நானாட்டான் பிரதேச செயலாளர் திருஞானசம்பந்தன் ஆகியோர் கலந்து கொண்டனர். இந் நீர்த்தாங்கி திறந்துவைக்கப்பட்டதையடுத்து இக்கிராம மக்களின் தண்ணீர்ப் பிரச்சினை தீர்த்து வைக்கப்பட்டதாகவும் மக்கள் தெரிவித்துள்ளனர். (18)

# பண்டார வன்னியன் முல்லைக்கோட்டையை அழித்த 202 ஆம் ஆண்டு வெற்றி விழா

(ஒட்டுசுட்டான்)

வன்னி மண்ணின் இறுதி மன்னன் மாவீரன் பண்டார வன்னியன் முல்லைத்தீவுக் கோட்டையை அழித்த 202 ஆவது ஆண்டு வெற்றி விழா எதிர்வரும் 25 ஆம் திகதி சிறப்புற நடத்தப்படவுள்ளது.

இதற்கான ஆலோசனைக் கூட்டம் நேற்று முன்தினம் காலை 11.00 மணிக்கு பண்டாரவன்னியன் அறங்காவலன் குழுத்தலைவர் திருமதி இமெல்டா சுகுமார் தலைமையில் ஒட்டுசுட்டான் உதவி அரச அதிபர் பணிமனையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் நிதிக் குழு, விழாக் குழு, மலர்க்குழு என்பன தெரிவு செய்யப்பட்டன.

மேலும் விழாவினை கற்சிலைமடுவில் உள்ள நினைவுக்கல் அமைந்துள்ள இடத்தில் சிறப்புற நடாத்துவது எனவும் தீர்மானிக்கப்பட்டது. பண்டாரவன்னியன் தொடர்பாக விதை, கட்டுரை, நாடகப்போட்டிகளும் நடைபெறவுள்ளது.

இதில் முல்லை மாவட்டங்களைச் சேர்ந்த அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். (05)

# வீதிப்புனரமைப்பைத் தொடர பொதுமக்கள் வேண்டுகை

(விசுவமடு)

வீதிப் புனரமைப்பு வேலைகள் இடைநிடுவில் கைவிடப்பட்டுள்ளதாகவும்நிலையில்மக்கள் பயணிப்பதற்கு பல நெருக்கடிகளை சந்தித்து வருகின்றனர். கண்டாவளை பிரதேச செயலர் பிரிவிலுள்ள கல்லாற்று கிராமத்தில் இருந்து புளியம் பொக்கணை கண்ணகை அம்மன் ஆலயம் செல்லும் வீதி புனரமைப்பு வேலைகள் மேற்கொண்ட ஒப்பந்தக்காரர்கள் இடை நடுவில் வேலையை கைவிட்டுள்ளனர்.

வரும் மழை காலத்தில் இவ் வீதியால் மக்கள் பயணிக்க முடியாத ஓர் அவல நிலை ஏற்படவுள்ளது. இவ் வீதி சுமார் மூன்று கிலோ மீற்றர் தூரமுடையது. இவ் வீதியால் கல்லாற்றுக்கிராமத்தில் இருந்து புளியம்பொக்கணை கிராமம் ஊடாக மேற்குப்பக்கமாகவுள்ள பல கிராமங்களுக்கு மக்கள் வாகனங்களிலும், கால்நடையாகவும் பயணிக்கும் பிரதான வீதியாகும்.

இவ் வீதியை புனரமைப்பதற்காக ஒப்பந்தம்செய்து வீதியின் இரு பக்கமும் புனரமைப்பு செய்துவிட்டு நடுவில் சுமார் ஒரு கிலோமீற்றர் தூரம் பாரிய குன்றும், குழியுமாக இருக்கும் இவ் வீதியால் மக்கள் பயணிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக விசனம் தெரிவித்தனர்.

வரும் மழை காலத்திற்கு முன்னர் இவ் வீதியின் நடுப்பகுதியை புனரமைப்பு மேற்கொண்டு மக்களின் போக்குவரத்திற்கு உதவுமாறும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (46)

# கிளிநொச்சி மின்சார சபை காரியாலயத்தின் அனைத்து செயற்பாடுகளும் தற்காலிக கட்டடத்தில்!

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி பிரதேச மின்சார சபைக் காரியாலயம் போதிய இட வசதிகள் அற்ற நிலையில் தற்காலிக கட்டடத்திலேயே தற்போது இயங்கிவருவதனைக்காணக் கூடியதாகவுள்ளது.

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலக வளாகத்தில் அமைந்துள்ள தற்காலிகக் கட்டடம் ஒன்றில் இருந்து கொண்டே மேற்படி கிளிநொச்சி பிரதேசத்திற்கான மின்சார வழங்கல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பெற்றுவருகின்றது. பொறியியலாளர் காரியாலயம் முதல் ஊழியர்கள் அலுவலகம், களஞ்சியப்படுத்தல் போன்றவைகள்யாவும் இந்த தற்காலிக கட்டடத்திலேயே அடக்கப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன் ஊழியர்கள் தங்குவதற்கான தங்குமிட வசதிகள் அற்ற நிலையில் பொறியியலாளர் முதல் ஊழியர்கள்வரை மேற்படி கட்டடத்திலேயே தங்கியிருந்து பணிகளை மேற்கொண்டு வருவதனைக்காணக் கூடியதாகவுள்ளது.

கடந்த 20 வருடங்களுக்கு முன்பாக கிளிநொச்சி மாவட்டத்தில் சகல வசதிகளும் உள்ளடங்கள[illegible]ன நீர் மின்சார உப நிலையம் இயங்கி வந்ததும் அதன்பிற்பாடு சிறிலங்கா இராணுவ நடவடிக்கை காரணமாக வான் தாக்கு தல் மற்றும் எறிகணைத் தாக்குதலினால் மேற்படி நிலையம் முற்றாக அழிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

மீண்டும் சமாதான ஒப்பந்தம் கைச்சாத்தானதன் பிற்பாடு கிளிநொச்சியில் மின்சாரம் வழங்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பெற்று இதுவரை 650 முதல் 700 வீடுக ளுக்கு மின்சாரம் வழங்கும் நடவடிக்கை மேற்கொள்ளப் பெற்றுள்ளதுடன் மேலும் மின்சாரம் வழங்கலுக்கான விஸ்தரிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பெற்று வருகின்ற நிலையில் கிளிநொச்சியில் மின்சார சபைக்கான சகல வசதிகள் கொண்ட நிரந்தரக் காரியாலயம் அமைக்கப் படாமையானது இங்கு கடமை புரியும் மின்சார சபை அதிகாரி முதல் ஊழியர்கள் வரை பலத்த அசௌகரியங் களுக்குள்ளாகியுள்ளது மாத்திரமன்றி மனத்தாக்கத்தினை உண்டு பண்ணியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# செம்மலையில் நிகொட் உதவிகள் 26 பேருக்கு தொழில்சார் கடனுதவி

செம்மலை கிழக்கின் நிகொட் நிறுவன நிதி உதவியுடன் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினர் நடைமுறைப்படுத்தப்படும் சமுதாய அபிவிருத்தி திட்டத்தின் கீழ் சமுக பொருளாதார அபிவிருத்தி சங்கத்தின் முன்னுரிமை அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட மொத்தம் 26 பயனாளிக்கு துறைசார் தொழில்களை ஆரம்பிக்கும் நோக்கில் மொத்தம் ஐந்து இலட்சம் ரூபா கடன் வழங்கப்பட்டது.

கடந்த 15 ஆம் திகதி பி.ப 3.00 மணிக்கு சமுகபொருளாதார அபிவிருத்திச் சங்கத்தலைவர் நா.மயில்வாகனம் தலைமையில் தேசியக் கொடியினை செம்மலை கிழக்கு கிராமசேவை உத்தியோகத்தர் திருமதி. வி.அமிர்தராஜினி ஏற்றினார்.

திட்டம் தொடர்பான கருத்துக்களை நிகொட் திட்ட சமுதாய அபிவிருத்தி இணைப்பாளர் சுதர்சன், த.பு. க.திட்ட ஆலோசகர் பாலசுப்பிரமணியம் ஆகியோர் நிகழ்த்தினர். (20)



கடந்த 09.07.2005 அன்று முல்லைத்தீவில் சுனாமியினால் தாய், தந்தையரை இழந்த பிள்ளைகளுக்கு ஜேர்மன் மக்களின் நிதியினை சத்தியமூர்த்தி வழங்குகின்றார். மொத்தமாக 80 பேருக்கு நிதி வழங்கப்பட்டது. (20)

# வறிய குடும்பங்களுக்கு 26 வீடுகள் கையளிப்பு

(மன்னார்)

மன்னார் நடுக்குடா பகுதியிலுள்ள பாவிலுப்பட்டான் குடியிருப்பில் உலகதரிசன நிதியுதவியுடன் 26 வீடுகள் கட்டப்பட்டு வறிய குடும்பங்களிடன் கையளிக்கப்பட்டுள்ளன.

மன்னார் நகரப் பிரதேச செயலாளர் ஸ்ரானி டிமெல்நந்தினி குரூஸ் உரியவர்களிடம் வீடுகளைக் கையளித்தார்.

இந்நிகழ்வில் அனுராதபுர பிரதேச உலக தரிசன இணைப்பாளர், மன்னார் மாவட்ட உலக தரிசன இணைப்பாளர் ஆகியோர் கலந்து கொண்டனர். (18)

# முல்லை. மாவட்ட தே. எ. பேரவையின் மாதாந்த சிறப்புக் கலந்துரையாடல்

முல்லை மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் மாதாந்த சிறப்புக் கலந்துரையாடல் கடந்த சனிக்கிழமை முற்பகல் பத்து மணிக்கு முல்லை மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் செயலாளரும், வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான ச. கனகரத்தினம் தலைமையில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் தமிழீழ தேசிய எழுச்சிப் பேரவை உறுப்பினர் உமைநேசன், தமிழீழ மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் செல்வி தமிழினி, முல்லை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் செ. முகுந்தன்,முல்லை மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவைப் பொறுப்பாளர் பொ. ஈழவன் ஸ்ரார் ஆகியோருடன் முல்லை மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவை உறுப்பினர்களும், நலன் விரும்பிகளும் இக்கலந்துரையாடலில் கலந்து கொண்டார்கள்.

இந்நிகழ்வில் பொதுக் கட்டமைப்புக்கான நீதிமன்றத்தடை உத்தரவு திருகோணமலையில் இராணுவக்கெடுபிடிகள் தாயகப் பிரதே சங்களில் போர்நிறுத்த உடன்பாட்டை மீறும் சிங்களப் படையினரின் கெடுபிடிகள் என்ற முக்கியமான விடயங்கள் கலந்துரையாடப்பட்டது.

இந்நிகழ்வில் தமிழீழ தேசிய எழுச்சிப் பேரவையின் பொறுப்பாளர், மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் ஆகியோர் சிறப்புரைகளை நிகழ்தினார்கள்.

இடம்பெற்ற உரைகளைத் தொடர்ந்து, கிராம ரீதியாக அரசியல் விழிப்புணர்வை ஏற்படுத்தல், பொது அமைப்புக்களுக்கான விசேட கருத்தமர்வு ஏற்படுத்துதல், மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் மாநாட்டை மிகவிரைவில் கூடுதல் என்ற தீர்மானங்களுடன் நண்பகல் 12.00 மணியளவில் கலந்துரையாடல் இனிது நிறைவேறியது. (20)

# கச்சாயில் படையினர் தொடர் பயிற்சி; மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்பு

(தென்மராட்சி)

**கச்சாய் கடல்நீரேரியில் சிறிலங்காப் படையினர் தொடர்ந்து பயிற்சி நடவடிக்கையில் ஈடுபட்டுவருவதால் சாவகச்சேரி நகரமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளதாக பொதுமக்கள் குற்றஞ் சாட்டியுள்ளனர்.**

கச்சாய் கடல் ஏரியில் சிறிலங்காப் படைகள் மேற்கொண்டு வரும் தொடர்பயிற்சி நடவடிக்கைகளால் சாவகச்சேரி நகரமே குண்டுச்சத்தத்தால் அதிர்வதாக நகரமக்கள் தெரிவித்துள்ளனர். பகல் இரவு என படையினர் தீவிர பயிற்சி நடவடிக்கையில் ஈடுபட்டிருப்பதுடன் குண்டுகளை வெடிக்கவைத்தும் வருவதால் வயோதிபர்கள், நோயாளர்கள், பாதிக்கப்பட்டுள்ளனர்.

மாணவர்கள் பாடங்களைப் படிக்கமுடியாத மனநிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இக்குண்டுச் சத்தங்கள் பொது மக்களின் இயல்பு நிலையைச் சீர்குலைத்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (28)

# வடஇலங்கை சங்கீதசபையின் எழுத்து மொழிப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

வடஇலங்கை சங்கீதசபையின் இவ்வாண்டுக்கான எழுத்து மொழிப்பரீட்சை எதிர்வரும் 23 ஆம், 24ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

வடஇலங்கை சங்கீத சபையினால் நடாத்தப்படுகின்ற நுண்கலை பாடங்களாகிய வயலின், மிருதங்கம், நடனம், சங்கீதம், பாட்டு போன்ற பாடங்களுக்கான எழுத்துப்பரீட்சைகளே நடைபெறவிருக்கின்றன.

இந்தப்பரீட்சை கிளிநொச்சி, யாழ்ப்பாணம்,முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களில் நடைபெறவுள்ளது. அந்த மாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்கள் அதே மாவட்டங்களில் பரீட்சை எழுதுவதற்கான பரீட்சை நிலையங்கள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாக வட இலங்கை சங்கீதசபை பொறுப்பாசிரியர் தெரிவித்துள்ளார். (கீ)

# ஆசிரியர் பயிற்சி கலாசாலையில் அலுவலக பாவனைக்கு கணினி இல்லை

(கோப்பாய்)

கோப்பாய் ஆசிரியர் பயிற்சி கலாசாலையில் அலுவலக பாவனைக்காக கணினிவசதி இல்லாத காரணத்தினால் அலுவலக பணிகளை விரைவாக செய்யமுடியாத நிலை தோன்றியிருக்கிறது.

அலுவலக பாவனைக்கு கணினி வசதி முக்கியமான ஒன்றாக இருக்கின்ற போதும் ஆசிரியர் கலாசாலையில் கணினி பாவனையில் இல்லாத காரணத்தால் அலுவலகப் பணிகளை விரைவாக முடிக்க முடியாது உள்ளதோடு பணியாளர்களுக்கு வேலைப்பளுவும் அதிகரித்துக் காணப்படுகின்றது.நீண்டகாலமாக கோப்பாயில் இயங்கிவருகின்ற இந்த கலாசாலைக்கு இதுவரைகாலமும் கணினிவசதி ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (கீ)

# யாழ்.இல் விபத்துக்களைக் கட்டுப்படுத்த துரித நடவடிக்கை எடுக்கப் பணிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் விபத்துக்களைக் கட்டுப்படுத்துவதற்கான துரிதநடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு உள்ளூராட்சி உதவி ஆணையாளர் இராசையா சகல உள்ளூராட்சி மன்றங்களுக்கும் உத்தரவிட்டுள்ளார்.

யாழ்.குடாநாட்டில் அதிகரித்து வரும் விபத்துக்களைக் கட்டுப்படுத்துவதற்காக யாழ்.அரசாங்க அதிபரால் விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கிணங்க உள்ளூராட்சி உதவி ஆணையாளர் இராசையா இவ் உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

குறிப்பாக யாழ்.மாவட்டத்தில் விபத்துக்கள் ஏற்படுவதற்கு காரணமான வீதி அமைப்புக் குறைபாடுகளைப் போக்குமாறும் வீதிச் சமிக்கை குறியீடுகள் வீதியோர மின் விளக்குகள் என்பவற்றைப் பொருத்துமாறும், வீதிவிபத்துக்குக் காரணமான கட்டாக்காலி நாய்களைக் கட்டுப்படுத்துமாறும் இராசையா சகல பிரதேசசபைகள் மற்றும் நகர சபைகளுக்கும் பணிப்புரை விடுத்துள்ளார்.

இந்நடவடிக்கைகளை யாழ். மாவட்டம் முழுவதிலும் துரிதப்படுத்துமாறும் அவர் மேலும் வலியுறுத்தியுள்ளார். (33)

# இந்தியாவில் இருந்து மீளத்திரும்பியோர் பதிவு செய்யும்படி கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

இந்தியாவில் அகதி முகாம்களில் வசித்து மீளவும் நாடு திரும்பிக்கொண்டிருக்கும் மக்களுக்கு உதவி புரிந்துவருகின்ற நிறுவனமாகிய புலம் பெயர்ந்தவர்களுக்கான சர்வதேச நிறுவனம் 2002ஆம் ஆண்டில் சமாதான உடன்படிக்கைக்கு பின் இந்தியாவிலிருந்து மீளவும் நாடு திரும்பியவர்களுக்கு தொழில் சார்ந்த உதவிகளை மேற்கொள்ளத் தீமானித்துள்ளது. எனவே, 2002 சமாதான உடன்படிக்கைக்கு பின் நாடு திரும்பி உதவித்திட்டங்களைப் பெற்றுக்கொள்ளாதவர்கள் தங்கள் பதிவுகளை இம்மாதம் 20 ஆம் திகதி தொடக்கம் மேற்கொண்டு உதவிகளைப் பெற்றுக்கொள்ள முடியும் எனப் புலம் பெயர்ந்தவர்களுக்கான சர்வதேச நிறுவன அதிகாரி அறிவித்துள்ளார்.

படகுகள் மூலம் மீளத்திரும்பியவர்களும் யு.என்.எச்.சி.ஆர். உதவியுடன் விமான மூலம் மீளத்திரும்பியவர்களும் தங்களது விபரங்களை தத்தம் பகுதி கிராமசேவையாளர் மற்றும் பிரதேச செயலர் உறுதிப்படுத்திய கடிதம் மற்றும் இந்தியாவிலிருந்து மீளத் திரும்பிய திகதியை உறுதிப்படுத்துவதற்கான ஆவணங்களுடன், யாழ் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் இல.38, கோவில் வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள புலம் பெயர்ந்தவர்களுக்கான சர்வதேச நிறுவனத்துடனும், கிளிநொச்சி மாவட்டத்தை சேர்ந்தவர்கள் 155ஆம் கட்டை கிளிநொச்சி உலக உணவுத்திட்ட வளாகத்தில் அமைந்துள்ள புலம் பெயர்ந்தவர்களுக்கான சர்வதேச நிறுவன அலுவலகத்துடனும் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்படுகிறார்கள்.

மேலும் முல்லைத்தீவு மாவட்டத்தை சேர்ந்தவர்கள் தங்களுக்கான உதவிதிட்டத்தைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு தங்கள் பகுதியில் உள்ள கிராமசேவையாளர் மற்றும் உள்ளூர் அரச சார்பற்ற நிறுவங்களுடன் தொடர்புகொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

மேலும் மேற்படி நிறுவனம் இதுவரை யாழ் மாவட்டத்தில் 470 பேருக்கும் கிளிநொச்சி மாவட்டத்தில் 177 பேருக்கும் தொழில் சார்ந்த உதவிகளையும் 196 பேருக்கு நிரந்தர மலசல கூடத்தையும் வழங்கியதுடன் பல்வேறு சமூகம் சார்ந்த வேலைத்திட்டங்களையும் மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வடமராட்சியில் 340 பேருக்கு கடற்றொழில் உபகரணம் வழங்கல்

(பருத்தித்துறை)

சுனாமி ஆழிப்பேரலையால் பாதிப்புக்குள்ளான யாழ்.வடமராட்சி வாழ் கடற்றொழிலாளர்களுக்கு ஏழாம் கட்டமாக கியூமெடிக்கா நிறுவனத்தினரால் மீன் பிடிப்படகுகள் வழங்கப்படவுள்ளன.

இந் நிறுவனத்தினரால் மூன்று இலட்சம் பெறுமதியான மீன்பிடி உபகரணங்கள் 704 கடற்றொழில் குடும்பங்களுக்கு வழங்கப்படுகின்றன.

எதிர்வரும் 21ஆம் திகதி 340 படகுகளும் அதற்கான வெளியிணைப்பு இயந்திரங்கள் மீன்பிடி வலைகள் என்பன நிறைவு நிகழ்வாக பருத்தித்துறை சுப்பர்மடம் கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்க முன்றலில் வைத்து காலை 10.00 மணிக்கு வழங்கப்படவுள்ளன.

யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் சங்க சமாசச்செயலர் சூரியகுமார் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் ஜேர்மன் நாட்டின் இலங்கைக்கான தூதரகத்தைச் சேர்ந்த அதிகாரி, கியூமெடிக்கா நிறுவன திட்டப் பணிப்பாளர், யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் சங்க தலைவர் தவரட்ணம் உட்பட பலர் கலந்துகொள்ளவுள்ளனர். (கா)

# பொலிசாரால் பொதுமக்களுக்கு பாதுகாப்பில்லை; யாழ்.மனித உரிமை ஆணைக் குழுவில் முறைப்பாடு

(நல்லூர்)

யாழ்ப்பாண பொலிஸ் நிலையங்களுக்கு விசாரணைக்கு அழைக்கப்படும் பொதுமக்களுக்கு பொலிசாரால் பாதுகாப்பு வழங்க முடியவில்லையென யாழ்வாசி ஒ[illegible]வரால் யாழ்ப்பாணம் [illegible]னிதஉரிமை [illegible]ணைக் குழுவில் [illegible]றைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் காலை 10.45 மணிக்கு யாழ்.பொலிஸ் நிலையத்திற்கு விசாரணைக்காக அழைக்கப்பட்ட ஒருவருக்கு பொலிசார் முன்னிலையில் இன்னொருவர் தாக்கியதில் தாக்குதலுக்கு இலக்கானவர் காயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். இந்த சம்பவத்தில் பாசையூரைச் சேர்ந்த இம்மனுவேல் (வயது54) என்பவரே காயமடைந்தவராவார்.

[illegible]ந்தச்சம்பவம் பற்றி மேலும் [illegible] வருவதாவது; பாசையூரைச் சேர்ந்த இருசாரார்களுக்கிடையே நீண்டகாலமாக காணித்தகராறு இருந்து வந்தது. கடந்த 16ஆம் திகதி இது தொடர்பாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. விசாரணைக்காக இருசாராரும யாழ்.பொலிசாரால் அழைக்கப்பட்டிருந்தபோது பொலிஸ் நிலையத்தில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் முற்றியதால் மோதலில் முடிந்தது.

பொலிசார் அருகில் இருந்த வேளை தாக்கப்பட்டும் பொலிசார் எதுவித நடவடிக்கையும் எடுக்காது இருந்துள்ளனர். பொலிசாரின் இத்தகைய பொறுப்பற்றசெயற்பாடுகளைக்கண்டித்து மனித உரிமை ஆணைக் குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (கீ)

# சமுர்த்தி வங்கிச் சங்கக்கட்டட அடிக்கல் நாட்டு விழா

(அலுவலக செய்தியாளர்)

கொடிகாமம் வலயத்திற்கான சமுர்த்திவங்கி சங்க கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டும் வைபவம் அண்மையில் கொடிகாமம் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலைக்கு அருகாமையில் இடம்பெற்றது.

கிருஷ்ணன் மணிவண்ணன் எனும் தனிநபரால் சமுர்த்தி வங்கிக்கென அன்பளிப்புச்செய்யப்பட்ட இரண்டு பரப்புக்காணியினுள் மேற்படி வங்கிக்கான கட்டட அடிக்கல் நாட்டும் வைபவம் நடைபெற்றுள்ளது.

இதில் சமுர்த்தி கட்டுப்பாட்டுச் சபைத்தலைவர், வங்கிமுகாமையாளர், மேலதிக உதவி அரசாங்க அதிபர், தென்மராட்சி, கொடிகாமம் அரசியல்துறைப்பொறுப்பாளர் இரத்தினம், திட்டமிடல் பணிப்பாளர் சொக்கன், பொதுமுகாமையாளர் பாலகரன் மற்றும் சமுர்த்தி உத்தியோகத்தர்கள், கிராமஅலுவலர் சமுர்த்தி கட்டுப்பாட்டுச்சபை உறுப்பினர், உட்படப்பலர் கலந்து கொண்டனர். (சு)

# ஆசிரியர்களுக்கு பயிற்சி வகுப்பு

(நல்லூர்)

யாழ்.கல்வி வலய பாடசாலைகளில் ஆங்கிலமொழிமூலம் விஞ்ஞானமும் தொழில்நுட்பமும், கணிதம், ஆகிய பாடங்கள் கற்பிக்கும் போதனாசிரியர்கள் பயிற்சி வகுப்பு எதிர்வரும் 22,23,24 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் கனகரட்ணம் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

தரம் 6,7,8,9 ஆகிய வகுப்புகளுக்கு கணிதம், விஞ்ஞானமும் தொழில் நுட்பமும் ஆகிய பாடங்களைக் கற்பிக்கும் போதனாசிரியர்களை இதில் கலந்துகொள்ளுமாறு யாழ். வலயக் கல்விப்பணிப்பாளர் கேட்டுக்கொள்கின்றார். (கீ)

# யாழ்.இந்துக் கல்லூரியில் கணினி பொறி திருத்தல் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

கணினிப்பொறி திருத்துதல் பயிற்சிநெறி யாழ். இந்துக்கல்லூரியில் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் ஓகஸ்ட் முதலாம் திகதி பிற்பகல் 3.00 மணிக்கு இப்பயிற்சிநெறி வைபவரீதியாக ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

இப்பயிற்சி நெறியில் க.பொ.த உயர்தர தேர்வு எழுதிவிட்டு இருப்போரும் மற்றும் ஏனையோரும் பயிற்சியைத் தொடரலாம். பயிற்சி நெறிக்காலம் இரண்டுமாதங்களாகுமென யாழ்.வலய கல்விப்பணிப்பாளர் வி.ரி செல்வரட்ணம் தெரிவித்தார். (சு)

# சாரதி அனுமதிப்பத்திரம் கிடைக்காதோர் தொடர்புகொள்க

(அலுவலக செய்தியாளர்)

சாரதி அனுமதிப்பத்திரத்திற்கு விண்ணப்பித்து எழுத்துப்பரீட்சை, செயல்முறைப்பரீட்சைகளுக்கு தோற்றி சித்தியடைந்தோரில் அனுமதிப்டத்திரம் இதுவரை கிடைக்கப்பெறாதோர் உரிய சான்றுகளுடன் யாழ் மாவட்ட மோட்டார் போக்குவரத்து பதிவுத்திணைக்களத்துடன் தொடாபு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

சாரதி அனுமதிப்பத்திரம், உடமைமாற்றம், புதிய பதிவு ஆகியவற்றிற்கு விண்ணப்பித்து இதுவரை அனுமதிப்பத்திரம், புத்தகம், இலக்கத்தகடுகள் கிடைக்கப்பெறாதோர் பழைய கடவுச்சீட்டு அளவுடைய இரு புகைப்படங்களுடன் கிராமசேவகரால் உறுதிப்படுத்துப்பட்ட தேசிய அடையாள அட்டை பிரதியுடன் யாழ்.மாவட்ட மோட்டார் பதிவுத்திணைக்களத்துடன் தொடர்பு கொள்ளும்படியும் ஏற்கனவே பிரதேச செயலகங்கள் ஊடாகவோ அல்லது அஞ்சல் வழியாகவோ மீளக்கோரியிருந்தும் இதுவரை கிடைக்கப் பெறாதவர்கள் அதற்கான சான்றுகளுடனும் தொடர்பு கொள்ளும்படியும் யாழ். மாவட்டமோட்டார் போக்குவரத்து பதிவு திணைக்கள ஆணையாளர் தெரிவித்துள்ளார். (சு)

# பேரினவாதத்தின் நான்காவது கையாக நீதிமன்றங்கள்!

சிங்களப்பேரினவாதசக்திகளின் நான்காவது கையாக சிறிலங்கா நீதிமன்றங்கள் செயற்படுவதையே பொதுக்கட்டமைப்புத் தொடர்பான உயர் நீதிமன்றத் தீர்ப்பு வெளிக்காட்டியுள்ளது. அதாவது பொதுக்கட்டமைப்பின் பிரதான சரத்துக்களுக்கு தடை விதித்ததன் மூலம் தமிழர் தாயகப் பகுதியில் சுனாமி அனர்த்த நிவாரணப் பணிகளை நீதிமன்றம் முடக்கியுள்ளதெனலாம்.

சிறிலங்காவைப் பொறுத்து ஏற்கனவே பௌத்த - சிங்கள அடிப்படைவாத அமைப்புகள், இனவெறிமிக்க அரசியல்வாதிகள், இனவாத ஊடகங்கள் என்பன பேரினவாத சக்திகளாக அடையாளம் காணப்பட்டவையாகும். இவை பெரும்பாலும், தனித்தும், தேவை ஏற்படும்போது கூட்டாகவும் செயற்படுவதுண்டு.

இந்த வகையில் சிறிலங்கா நீதிமன்றங்களும் சேர்த்துக் கொள்ளப்படத்தக்கதான நடவடிக்கைகளை அவை வெளிப்படையாகவே மேற்கொள்ளத் தொடங்கிவிட்டுள்ளன. கடந்த காலத்திலும், இத்தகைய செயற்பாடுகளை நீதிமன்றங்கள் மேற்கொண்டே இருந்தன. ஆயினும் பொதுக்கட்டமைப்பு விடயத்தில் உயர் நீதிமன்றத்தின்



தீர்ப்பு இதனை உறுதி செய்வதாகவே உள்ளது.

இனப்பிரச்சினை தீர்வு தொடர்பாகவோ அன்றி தமிழரின் நலன் தொடர்பாகவோ சிறிலங்கா அரசாங்கங்கள் கையிலெடுக்கும் போது பேரினவாத ஊடகங்கள் இனவாத அரசியல் வாதிகள், பௌத்த பீடங்கள் உட்பட்ட அடிப்படைவாத சக்திகள் அவற்றிற்கு எதிராகக் கூச்சல் இடத் தொடங்குவதுண்டு. இக் கூச்சல்கள் ,பேரணிகள் ,கூட்டங்கள் வேலை நிறுத்தங்கள் என நீண்டு செல்வதுண்டு.

இவ்வாறான கூச்சல், குழப்பங்கள் ஊடாக அரசாங்கத்தை அவர்கள் தமது வழிக்குக் கொண்டு வந்து விடுவதுண்டு. இவற்றிற்குப் பின்னணியில் அரசாங்கம் கூட இருப்பதுண்டு. அவ்வாறு இருந்தும், சில வேளைகளில் இப் பேரினவாதசக்திகளின் கூச்சல் குழப்பங்களுக்கு ஏற்ப அரசாங்கத்தால் நடந்துகொள்ள முடியாது போய் விடுவதும் உண்டு. அதாவது புற சக்திகளின் செல்வாக்கு அழுத்தம் அதிகமாக இருக்கும் பட்சத்தில் இவ்வாறான நெருக்கடி நிலை அரசாங்கத்திற்கு உருவாகுவதுண்டு.

இத்தகையதொரு நிகழ்வே பொதுக்கட்டமைப்பு விடயத்திலும் அரசாங்கத்திற்கு [illegible]ட்டது. அதாவது பொதுக்கட்டமைப்பு [illegible]கப்படுதல் வேண்டும் என்ற அழுத்[illegible]க்காவில் இருந்து பல முன்னணி நாடுகளின் விருப்பமாக இருந்தது. இலங்கைக்கு ஐ.நா சபையின் விசேட தூதுவராக விஜயம் செய்திருந்த முன்னாள் அமெரிக்க சனாதிபதி பில்கிளிங்டன் கூட இதனை வலியுறுத்தியிருந்தார்.

இந்த வகையில் பொதுக்கட்டமைப்பிற்கு அரசாங்கம் இணங்கி வந்தமைக்கு சிறிலங்கா அரசு மீதான அழுத்தமே காரணமாகு[illegible]கையினால் இப்பொதுக்கட்டமைப்பு [illegible]யத்தை முடிவிற்கு [illegible]ண்டு வர அன்றி செய[illegible]களை முடக்கு[illegible]ற்கு நான்[illegible]வது [illegible] அரசிற்குத் தேவைப்படுவதாக இரு[illegible]னில் மிகையாகாது.


தமிழ்மக்கள் தொடர்பான விவகாரத்தில் நீதித்துறை நீதியுடனும், நடுநிலையுடனும் நடந்து கொள்வதில்லை என்பது பொதுவான அபிப்பிராயமாக உள்ளது. அதாவது சிறிலங்கா அரசு சார்ந்ததும் அதன் ஆயுதப்படை சார்ந்ததுமான வழக்குகளில் தமிழ் மக்கள் திருப்திகொள்ளும் தீர்ப்பு எவையும் கிடைப்பதாக இல்லை. மாறாக குற்றவாளிகளைப் பாதுகாப்பதும், சட்டங்களை மீறிய நடவடிக்கைகளுக்கு மாறாக அங்கீகாரம் அளிப்பதும் அவற்றின் நடவடிக்கையாகவுள்ளது.

அதாவது குற்றவாளிகளை அரசாங்கத்தால் பாதுகாக்க முடியாதுபோனால் அவர்களை நீதித்துறை பாதுகாத்துக் கொள்கின்றது. ஒரு புறத்தில் தண்டனையில் இருந்து விலக்களிக்கப்படுகின்றது. இல்லாது போனால் விசாரணையே மேற்கொள்ளமுடியாத சூழ்நிலையையே உருவாக்குகின்றது. சிலவேளைகளில் சாட்சியங்கள் நீதிமன்றிற்கு வர முடியாத சூழ்நிலைகளை நீதிமன்றங்களே உருவாக்கி விடுகின்றன.

அவ்வாறு இல்லாதுவிடில் பிந்துனுவெவ படுகொலைச் சம்பவத்தில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் தண்டனையில் இருந்து எவ்வாறு தப்பியிருக்க முடியும்? பல இனப்படுகொலை வழக்குகளின் சாட்சியங்கள் பாதுகாப்பாகவும், பயமின்றியும் சென்றுவர முடியாத நீதிமன்றங்களுக்கு மாற்றியிருக்கவும் மாட்டாது.

இத்தகைய இனவிரோத நடவடிக்கைகளுக்கும் பாதுகாப்பு அளிக்கும் வகையில் நீதிமன்றங்கள் செயற்பட்டது மட்டுமல்ல, இனப்பிரச்சினை தொடர்பான தீர்வு முயற்சிகளுக்கு முட்டுக் கட்டை போடும் விதத்திலும் நீதிமன்றத்தின் செயற்பாடுகள் அமைந்ததுண்டு.

பேரினவாத அமைப்புக்கள் தமது எதிர்ப்பு நடவடிக்கைகள் அரசியல் தோல்வி அடையும் பட்சத்தில் அதாவது அரசாங்கம் அதற்கு ஏற்ற விதத்தில் செயற்பட முடியாத நிலையில் நீதிமன்றத்தின் மூலம் தமது கோரிக்கையை நிறைவேற்றிக் கொள்ள முடியும் என்ற நம்பிக்கை பேரினவாதிகளுக்கு உண்டு.



இத்தகைய நிலைக்கு சிறிலங்கா அர[illegible]ல் யாப்பு இனவாத சக்திகளின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யத்தக்க வகையிலானதாக இருப்பதும் -நீதியாளர்களும் பேரினவாத சக்திகளின் அபிலாசைகளுக்கு ஏற்படச் செயற்படும் விருப்பும் உணர்வும் கொண்டவர்களாகவும் இருப்பதுமே இதற்குக் காரணமாகும்.

அவ்வாறு இல்லாதுவிடில் இனப்பிரச்சினை தொடர்பான விடயத்தில் சமாதான முயற்சிகளுக்கு இடையூறு விளைவிக்கத்தக்க தீர்ப்புக்களையோ அன்றி தமிழ்மக்களுக்கான மனிதாபிமானப் பணிகளை முடக்குவதற்கான தீர்ப்புக்களையோ நீதிமன்றங்கள் வழங்கியிருக்க முடியாது.

எடுத்துக் காட்டாக2002ஆம் ஆண்டு விடுதலைப்புலிகளுக்கும், சிறிலங்கா அரசாங்கத்திற்கும் இடையில் தாய்லாந்தில் இரண்டாவது சுற்றுப் பேச்சுவார்த்தைகள் நடந்து கொண்டிருந்த வேளையில் 1996ஆம் ஆண்டு நடந்த மத்திய வங்கிக் குண்டு வெடிப்புத் தொடர்பாக தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் அவர்களுக்கு 200 வருடச் சிறைத்தண்டனை வழங்கித் தீர்ப்பளித்திருக்க மாட்டாது.

அதாவது சமாதான முயற்சிகளில் முன்னேற்றம் ஏற்படும் என எதிர்பார்த்துக் கொண்டிருந்த நிலையில் இத் தீர்ப்பை அவசர அவசரமாக அதாவது பேச்சுவார்த்தை மேசையில் இருதரப்பினரும் இருக்கையில் நீதிமன்றம் வழங்கியிருந்தமையானது சமாதானப்பேச்சுவார்த்தை மேசையில் குழப்பத்தையும், முறுகல்நிலை ஒன்றையும் ஏற்படுத்துவதற்கானதே ஆகும்.

அன்றும் அத் தீர்ப்பின் பின்னணியில் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் கை இருந்தது என்பதில் சந்தேகம் கொள்ள எதுவுமே இல்லை. அதாவது அன்றைய ஐ.தே. முன்னணி அரசாங்கம் புலிகளுடன் நடத்திய பேச்சுவார்த்தைகளைக் குழப்பத்திற்கு உள்ளாக்கும் வகையிலேயே இத் தீர்ப்பு வழங்கப்பட்டது. ஆனாலும் விடுதலைப்புலிகள் பொறுமை காத்ததினால் பேச்சுவார்த்தைகள் தொடர்ந்து நடைபெற்றன.

தற்பொழுதும் இதை ஒத்ததொரு செயற்பாட்டையே உயர் நீதிமன்றம் மேற்கொண்டுள்ளதெனலாம். அதாவது சுனாமி அனர்த்த நிதி முகாமைத்துவப் பொதுக்கட்டமைப்புத் தொடர்பான தீர்ப்பானது இப் பொதுக்கட்டமைப்பை முடக்கத்திற்கு உள்ளாக்கும் நோக்கம் கொண்டதே.

அத்தோடு உயர் நீதிமன்றம் தடை விதித்த சரத்துக்கள் யாவுமே கட்டமைப்பில் சிங்களப் பேரினவாத சக்திகள் தீவிரமாக எதிர்த்துவரும் சரத்துக்களேயாகும். அதாவது தடைவிதிக்கப்பட்ட விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள கிளிநொச்சியில் பிராந்தியக்குழுவின் தலைமையகம் அமைந்திருப்பதும், விடுதலைப்புலிகளின் தலைமையின் கீழ் பிராந்தியக்குழு செயற்படுவதும் நிதி கையாள்வதும் போன்ற விடயங்களே பேரினவாத சக்திகளின் தீவிர எதிர்ப்பிற்கு உள்ளான விடயங்களாகும். ஆகையினால் இத் தடை மூலம் சிங்களப் பேரினவாதசக்திகளின் கோரிக்கைகளை உயர்நீதிமன்றம் நிறைவேற்றியுள்ளது என்றே கூற முடியும்.

இந் நிலையில் உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பினால் அரசாங்கம் பெரிதும் மகிழ்ச்சி அடைந்துள்ளது. பொதுக்கட்டமைப்பை அமுல் செய்வதற்கு உயர் நீதிமன்றம் தடை விதிக்கவில்லை எனக் கூறிக்கொள்வதில் அனர்த்தம் எதுவுமில்லை. பொதுக்கட்டமைப்பை நீதிமன்றம் ஆரம்பத்திலேயே முடக்கி விட்டதென்பதே நியாயமாகும்.

இது ஒரு வகையில் தாய்லாந்தில் இடம் பெற்ற இரண்டாவது கட்டப் பேச்சுவார்த்தையின்போது யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உடனடி மனிதாபிமானப் பணிகளை மேற்கொள்வதற்கு அமைக்கப்பட்ட "சிரான்" நிலைக்குக் கூட பொதுக் கட்டமைப்பு உருப்பெறவில்லை என்றே கூறலாம்.

அதாவது "சிரான்"அமைப்பு உருவாக்கப்பட்டு ஒரு காரியாலயமும் அதற்கெனத் திறக்கப்பட்டு பிரதிநிதிகளும் தெரிவு செய்யப்பட்டு சில கூட்டங்கள் ஆயினும் நடை பெற்றதன் பின்னரே அவ் அமைப்பின் செயற்பாடுகளுக்கு இடையூறுகள் வந்தன. அத்தோடு சிரானின் செயற்பாடு முடக்கப்பட்டதாயினும் அதற்கெனத் தற்பொழுதும் ஒரு காரியாலயம் உள்ளது.

ஆனால் பொதுக்கட்டமைப்பு என்பது அதற்கு முன்பாகவே செயலிழந்து போய் விட்டது. காரியாலயமோ அன்றி பிரதிநிதிகளையோ அன்றி ஒரு கூட்டமேதானும் கூட்டப்படாத நிலையில் இவ்அமைப்புச் செயலிழக்கச் செய்யப்பட்டுள்ளது எனலாம்.

இந்த நிலையில் எவ்வாறு உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புக் குறித்து அரசாங்கம் மகிழ்ச்சி தெரிவிக்க முடியும்? பொதுக் கட்டமைப்பு இயங்குவதாக அர்த்தப்படுத்த முடியும்? பொதுக்கட்டமைப்பு இந்த அளவிலேயே இருந்ததால்போதும் எ[illegible]பதனாலா? அன்றிப் பொதுக்கட்டமைப்பு என்[illegible] தொல்லை விட்டது என்பதினாலா?

சிறிலங்கா நீதித்துறை ஊழல் மோசடிகள் நிறைந்ததென சர்வதேச அமைப்புக்களே உறுதி செய்துள்ளன. அத்தோடு சிறிலங்கா நீதித்துறை ஆட்சியில் இருபபவர்களின் அரசியல் பழிவாங்கலுக்கு பயன்படுகின்றது என்பதை வெளிப்படுத்துவதற்கான எடுத்துக் காட்டுக்களும் உண்டு.

இத்தகைய நிலையில் பௌத்த சிங்களப் பேரினவாதத்தின் நான்காவது கையாகவும், நீதித்துறை செயற்படுவதானது சிறிலங்கா ஆட்சி அலகுகளில் எதிலுமே தமிழ்மக்களுக்கு நீதி கிடைக்காது என்பதையே வெளிப்படுத்துதிவதாகிறது. இந் நிலையில் தமக்கு நீதியும், பாதுகாப்பும் கிட்டும் அமைப்பொன்றை தமிழ்மக்கள் உருவாக்குதல் என்பது காலத்தின் தேவையாகவே நிச்சயம் இருக்கும்.

- ஜெயராஜ்



கடற்கரும்புலி மேஜர் காந்தரூபன் நினைவுநாள் நிகழ்வில் தேசியத்தலைவர் அவர்கள்........!




**11.07.2005-**
**-17.07.2005**

**11**

⇨திருகோணமலை உப்புவெளிப் பகுதியில் தமிழீழ விடுதலைப்புலிகள் மீது தாக்குதல் நடத்தப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து யாழ். குடாநாட்டிலும் திருமலையிலும் துக்கம் அனுஷ்டிப்பு.

⇨திருமலைஉப்பு வெளியில் சிறிலங்கா படையினரால் நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவத்தில் வீரச்சாவடைந்த போராளிகளின் வித்துடல்களுடன் ஊர்வலமாக வந்த மக்களை கண்ணீர்ப்புகைக்குண்டு வீசி கலைத்து குழப்பம் விளைவிக்கும் நடவடிக்கையில் ஈடுபடுவதற்கான முயற்சியில் சிறிலங்கா பொலிசார் ஈடுபட்டனர்.

⇨வவுனியா ஓமந்தைப்பிள்ளையார் ஆலய வளவினுள் வைக்கப்பட்டிருந்த புத்தர் சிலை இரவோடிரவாக அகற்றல்.

⇨மட்டக்களப்பு ஏறாவூரில் மாணவன் ஒருவர் இனந்தெரியாத நபர்களினால் கடத்தப்பட்டு கைக்குண்டு வீசிக்கொலை.

**12**

⇨திருமலை உப்புவெளியில் சிறிலங்காப் படையினரால் படுகொலை செய்யப்பட்ட போராளிகள் இருவரதும், தேசிய துணைப் படை வீரர்,நாட்டுப்பற்றாளர் ஆகிய நால்வரின் வித்துடல்கள் மக்களின் அஞ்சலியுடன் ஆலங்குளம் மாவீரர் துயிலுமில்லத்தில் பூரண இராணுவ மரியாதையுடன் விதைக்கப்பட்டன. அத்துடன் திருமலையில் பூரண ஹர்த்தாலும் அனுஷ்டிக்கப்பட்டது.



⇨கடற்கரும்புலி மேஜர் காந்தரூபனின் 15ஆம் ஆண்டு நினைவுநாள் நிகழ்வில் தேசியத்தலைவர் அவர்கள் பங்கேற்று நினைவு கூர்ந்தார். இதன்போது காந்தரூபன்அறிவுச் சோலை மாணவர்களால் உருவாக்கப்பட்ட 'இளங் கதிர்' எனும் நூலினை அறிவுச்சோலை மாணவர் வழங்க தேசியத் தலைவர் பெற்றுக்கொண்டு சிறப்பித்தார்.

⇨ திருகோணமலையில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச்சம்பவம் மற்றும் கைக்குண்டுத்தாக்குதல் சம்பவத்தில் 14 சிறிலங்காப் படையினர் காயம்.

⇨ மக்களின் உரிமையைப் பாதுகாத்து தேர்தல் ஒன்றை நடத்தும்வரை மக்கள் சக்திப் பேரணிகளை நடத்துவோம் என மக்கள் சக்தி பேரணியின் இறுதிநாள் நிகழ்வில் எதிர்க் கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு.

**13**

⇨ புத்தளம் மருதங்குளிப்பகுதியில் தமிழ் குடும்பஸ்தர் ஒருவர் சுட்டுக்கொலை.

⇨ திருமலையில் சிறிலங்கா இராணுவத்தினர் நிலைகொண்டுள்ள பகுதிகளில் இனந்தெரியாதோரின் கைக்குண்டுத்தாக்குதலில் ஐந்து சிறிலங்காப்படையினர் காயம்.

**14**

⇨ திருகோணமலை கும்புறுப்பிட்டிப் பகுதியில் சிறிலங்கா கடற்படையினர் நடத்திய துப்பாக்கிப்பிரயோகத்தில் தமிழ் இளைஞர் ஒருவர் பலி, மற்றுமொரு இளைஞர் படுகாயம்.

⇨ திருமலை-அநுராதபுரச்சந்தியில் படையினரை இலக்குவைத்து வீசப்பட்ட கைக்குண்டு வெடித்ததில் பொதுமக்கள் இருவர் காயம்.

⇨ திருகோணமலை மாவட்டம் தம்பலகாமத்தில் இனந்தெரியாத நபர்கள் மேற்கொண்ட துப்பாக்கிச்சூட்டில் பொலிஸ் அதிகாரி ஒருவர் காயம்.

**15**


⇨ 30.06.2005 அன்று எழுதிய கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள யோசனைகளை முழுமையாக ஏற்றுக்கொண்டு கூடியவிரைவில் நடவடிக்கை எடுக்கவேண்டும். மாறாக மேலும் கால தாமதங்கள் ஏற்படுமானால் நாம் ஏற்கனவே கூறியதைப்போன்று எமக்கே உரிய பாதுகாப்பான பயணவழிமுறைகளை கைக்கொள்ள வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுவோம். என போர்நிறுத்த கண்காணிப்புக்குழுத் தலைவருக்கு அரசியல்துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் எழுதிய கடிதத்தில் தெரிவிப்பு.

⇨ பொதுக்கட்டமைப்பிற்கெதிராக சிறிலங்கா உயர் நீதிமன்றம் இடைக்கால தடை விதிப்பு.

⇨ தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் முதல் தாக்குதல் தளபதியாக இருந்து வீரச்சாவைத் தழுவிக்கொண்ட லெப்.சீலன் அவர்களின் 22ஆம் ஆண்டு நினைவு நாள் நிகழ்வுகள் சாள்ஸ் அன்ரனி சிறப்புப்படையணியினரால் அனுஷ்டிப்பு.



⇨ எங்கள் விடுதலை என்பதும் எங்கள் மக்களின் நல்லவாழ்வென்பதும் சிங்களவர்களின் கருணையினாலோ அல்லது சிறிலங்கா அரசின் பெருந்தன்மையினாலோ விளையப் போவதில்லை என்பதை என்றும் எம்மால் உறுதியாகக் கூறமுடியும். இவ்வாறு லெப்.சீலனின் 22ஆம் ஆண்டு நினைவுநிகழ்வில் தமிழீழ விடுதலைப்புலிகளின் மூத்ததளபதியும், புலனாய்வுத்துறைப் பொறுப்பாளருமான பொட்டம்மான் தெரிவிப்பு.



⇨ அம்பாறை மாவட்டம் அக்கரைப்பற்றில் ஆட்டோசாரதி உட்பட மூவர் ஆயுததாரிகளால் கடத்திச்செல்லப்பட்டு சுட்டுக்கொலை செய்யப்பட்டதுடன் அவர்கள் பயணித்த ஆட்டோவும் தீக்கிரையாக்கப்பட்டது.

⇨ யாழ்.தேசிய கல்வியியற்கல்லூரியில் இடம்பெற்ற இந்து மாநாட்டுக்கு ஆயுதம் தாங்கிய பொலிசார் மற்றும் பாதுகாவலர்களுடன் சென்ற ஈ.பி.டி.பி அமைப்பாளர் மதன ராஜா அங்கிருந்த மாணவர்கள் மற்றும் பொது மக்களால் வெளியேற்றப்பட்டார்.


**16**

⇨ மட்டக்களப்பு நகருக்கு வடக்கே வந்தாறுமூலையில் சிறிலங்கா இராணுவச் சிப்பாய் ஒருவர் இனந்தெரியாத நபர்களினால் சுட்டுக்கொலை.

⇨ சிலாபம் நகரப்பகுதியில் இளைஞர் ஒருவர் சுட்டுக்கொலை.

**17**

⇨ எங்கள் மக்களுக்கான அவசர மனிதாபிமானத் தேவைகள் எதனையும் சிறிலங்கா அரசிடம் இணக்கப்பாட்டை ஏற்படுத்திப்பெறலாம் என்ற நம்பிக்கை பொதுக் கட்டமைப்புத் தொடர்பில் உயர்நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்புடன் முற்றாகத் தகர்ந்து விட்டது. எனவே மக்களின் அடிப்படை அவசர மனிதாபிமான உதவியானாலும் சரி, பிற உதவிகளானாலும் சரி நேரடியாக மேற்கொள்கின்ற தீர்க்கமான நிலைக்கு சர்வதேச சமூகம் தள்ளப்பட்டுள்ளது. இவ்வாறு அரசியல்துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப் பினர்களை சமாதான செயலகத்தில் சந்தித் துப் பேச்சு நடத்தியபின் செய்தியாளர்களிடம் தெரிவிப்பு.



⇨ மன்னாரில் அதிசக்தி வாய்ந்த வெடி பொருட்களுடன் ஏழுபேர் சிறிலங்காப் பொலிசாரால் கைதுசெய்து தடுத்துவைக்கப்பட்டுள்ளதாக அறிவிப்பு.

# சுனாமி பேரனர்த்தத்தின் துயரங்கள் பாடசாலை மாணவர்களிடையே பகிர்வு

### - பாதிப்புற்ற மக்களுடன் கலந்துரையாடவும் முயற்சி

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சி பிரதேச பாடசாலை மாணவர்களுக்கு சுனாமி குறித்த ஒளிப்படக்காட்சிகள் காண்பிக்கப்பட்டு வருகின்றன. இது சுனாமியால் பாதிப்புற்ற மக்களும் அவர்கள் பட்டதுயரங்கள், பாதிப்புற்ற பிரதேசங்கள், பாதிப்படைந்த உடமைகள், சுனாமி எப்படி வந்து, ஓய்ந்தது பற்றிய அம்சங்களை உள்ளடக்கி தயாரிக்கப்பட்டுள்ளது.

இதனால் பாடசாலை மாணவர்கள் மத்தியில் துயரமுற்ற மக்களின் உணர்வுகளில் பங்கெடுக்கும் மனவுணர்வு ஏற்பட்டுள்ளது. மற்றும் சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளை நேரில் சென்று பார்வையிடவும் ஒழுங்குகள் செய்யப்படுகின்றன.

பாடசாலை மாணவர்களிடையே பாதிப்புற்ற மக்களுடன் கலந்துரையாட வேண்டும் என்ற அவாவும் மேலோங்கி உள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. (12)


# பாவனைக்குதவாத உணவுப்பொருட்கள் வர்த்தக நிலையங்களில் விற்பனை!

விசுவமடுப்பகுதியில் பாவனைக்குதவாத நிலையில் உணவுப் பண்டங்கள் இருப்பதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இங்குள்ள வர்த்தகநிலையங்கள் சிலவற்றில் பிஸ்கட்வகைகள், காலங்கடந்து உழுத்தநிலையில் இருப்பதை அவதானிக்க முடிவதோடு பிஸ்கட்பக்கற்றை வாங்கி அவதானிக்கும் போது திகதி காலங்கடந்த நிலையில் இருப்பதுடன் பைகளில் உள்ள பிஸ்கட் பழுதடைந்து இருப்பதை அவதானிக்க முடிகிறது. பரந்தன், முல்லைத்தீவு வீதி, தெற்கு புறம் உள்ள வர்த்தக நிலையங்கள், முல்லைத்தீவு பிரதேச சுகாதாரப்பிரிவுக்குட்பட்ட பகுதியும் வீதிக்கு வடக்குப்பக்கம் உள்ள வர்த்தக நிலையங்கள் கிளிநொச்சி மாவட்டத்திற்கு உட்பட்ட பகுதியும் ஆகும். (46)

## கற்றல் உபகரணங்கள் வழங்க ஏற்பாடு

வட்டக்கச்சிப் பிரதேசத்தில் உள்ள பாடசாலைகளில் யுனிசெப் நிறுவனத்தினரால் வறுமைக்கோட்டின் கீழ் உள்ள மாணவர்களுக்கு கொப்பி, பேனா,பென்சில் போன்ற பொருட்களை முதற்கட்டமாகவும் அடுத்த கட்டமாக பாடசாலைக்குத் தேவையான ஏனைய பொருட்களும் வழங்க ஏற்படாகி உள்ளது. (12)



கிராம சேவையாளர்களுக்கான அலுவலகங்கள் இன்மையால் கிராமசேவைஅலுவலர் சிலர் மர நிழல்களிலிருந்தே தமது கடமையினை மேற்கொண்டு வருவதனைக் அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. ஜெயந்திநகர் கிராம அபிவிருத்திச்சங்க வளாகத்தில் கிராமசேவை அலுவலர் மரநிழலின் கீழ் இருந்து பணிபுரிவதனை படத்தில் காணலாம். (படம்:-சோதி)

# தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பிலிருந்து வெளியகன்றவர்களுள் விழுப்புண்ணடைந்தவர்களுக்கான மருத்துவ ஆய்வு நடைபெறவுள்ளது அந்நாளில் கீழே பெயர் குறிப்பிட்டுள்ளவர்களை வருகை தருமாறு வேண்டுகிறோம்.

நாள்:– 23. 07. 2005

நேரம்:– முற்பகல் 09. 00 மணி

இடம்:– டாக்டர் பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவமனை, புதுக்குடியிருப்பு

| தொ இல | முழுப்பெயர் | தற்போதைய முகவரி |
|---|---|---|
| 01. | இராசதுரை நடேந்திரன் | பாஸ்கர், மே/பா.வேணாவில், புதுக்குடியிருப்பு. |
| 02. | கணபதிப்பிள்ளை அரியமனோகரி | 7ஆம் வட்டாரம், புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு. |
| 03. | ஜயாத்துரை பாலச்சந்திரன் | தொட்டியடி, விசுவமடு, கிளிநொச்சி. |
| 04. | கதிர்காமத்தம்பி நந்தகுமார் | 83,திருநகர், கிளிநொச்சி. |
| 05 | வைரமுத்து தேவராஜா | காமினி, மே/பா ஏரம்பப்பிள்ளையார் கோவிலடி, ஒட்டறுத்தகுளம், மல்லாவி. |
| 06 | கிருஸ்ணபிள்ளை இலங்கேஸ்வரன் | கனகசபாபதி, மே/பா உலகளந்த பிள்ளையார் கோவிலடி மேற்கு, 1ஆம் வட்டாரம்,புதுக்குடியிருப்பு. |
| 07. | இராசரெத்தினம் ஜெயகரன் | அகல்யாவீதி, அனிச்சயங்குளம், மல்லாவி. |
| 08. | குழந்தைவேல் அன்னலட்சுமி | இராசரெத்தினம், மே/பா சந்தையருகாமை, ஸ்கந்த புரம். |
| 09 | பொன்னுத்துரை விஜயகுமார் | 768, யோகபுரம் மத்தி, மல்லாவி. |
| 10. | வீரையா தருமலிங்கம் | 8 ஆம்கட்டை, ஆரோக்கியபுரம், ஸ்கந்தபுரம். |
| 11 | சிவா சந்திரன் | துர்க்காவீதி, 2ஆம் வட்டாரம், புதுக்குடியிருப்பு. |
| 12. | செல்லத்துரை பத்மராசா | இராமநாதபுரம், 6ஆம் யூனிற் வட்டக்கச்சி, கிளிநொச்சி. |
| 13. | பத்மநாதன் சுரேஸ்குமார் | 168, ஸ்கந்தபுரம், கிளிநொச்சி. |
| 14. | கந்தசாமி யோகச்சந்திரன் | மு.சந்தனம், வற்றாப்பளை, முள்ளியவளை. |
| 15. | கந்தசாமி விஜயகுமாரி | நா.சூரியகுமார் கடை, மே/பா கந்தசாமி, நட்டாங்கண்டல், மல்லாவி. |
| 16. | நாகையா சந்திரமோகன் | புதுக்குளம், ஒட்டுசுட்டான், முல்லைத்தீவு. |
| 17. | மாணிக்கம் முத்தமிழ்ச்செல்வன் | மூங்கிலாறு,உடையார் கட்டு, இளங்கோ வீட்டுத் திட்டம். |
| 18. | சற்குணம் பரராஜசிங்கம் | மட்டுஅம்பாறை குடியேற்றத்திட்டம், உடையார் கட்டு தெற்கு. |
| 19. | வேலப்பொடி நடேஸ் | மட்டுஅம்பாறை குடியேற்றத்திட்டம், உடையார் கட்டுதெற்கு. |
| 20. | இராசு நல்லுசாமி | வீரபத்திரர் மே/பா, நாகேஸ்வீதி, ஒலுமடு, மாங்குளம். |
| 21. | இராசையா சிவரஞ்சன் | த.சிவநாயகம், (கபூர்) மே/பா கதிரவன்குடியிருப்பு, வடகாடு, மல்லாவி. |
| 22. | யோசப் அன்ரனி குயின்ரஸ் | கனகராயன் குளம், மே/பா மருசலீன், பண்டார வன்னியன்வீதி. |
| 23 | இலட்சுமணன் குலேந்திரன் | க.உருத்திராபதி, நீர்ப்பாசனத்திணைக்களம், வவுனிக்குளம். |
| 24. | தில்லையன் கிருஸ்ணபிள்ளை | காவற்துறை முன்பாக, மாங்குளம். |
| 25. | நடராசா ரகுமான் | வடகாடு, மல்லாவி. |
| 26. | சந்திரன் தியாகராசா | இளமருதங்குளம், நட்டாங்கண்டல், மல்லாவி. |
| 27. | சிவகுரு ஈஸ்வரி | 5ஆம் வட்டாரம், அம்மன்கோவில் வீதி, இரணைப்பாலை. |
| 28. | நடராசா சந்திரகுமார் | இளமருதங்குளம், நட்டாங்கண்டல், மல்லாவி. |
| 29. | தர்மலிங்கம் விக்கினேஸ்வரன் | குரவயல், உடையார்கட்டு தெற்கு, உடையார்கட்டு. |
| 30 | பூபாலப்பிள்ளை தங்கமணி | புதிய குடியிருப்புத்திட்டம், உடையார்கட்டு தெற்கு, உடையார்கட்டு. |
| 31. | குமாரவேலு பாஸ்கரன் | 6ஆம் கண்டம், மானரூவி, ஒட்டுசுட்டான். |
| 32. | மெய்கண்டதேவன் திலீபன் | மே/பா அருந்தவராசா, 7ஆம் வட்டாரம், இரணைப்பாலை, புதுக்குடியிருப்பு. |
| 33. | சிவராசா விக்கினேஸ்வரன் | வட்டுவாகல், முல்லைத்தீவு. |
| 34. | நடராசா விஜயலட்சுமி | 8 ஆம் வட்டாரம், மந்துவில் புதுக்குடியிருப்பு. |
| 35. | பாலசுப்பிரமணியம் தனீஸ்வரன் | 2ஆம் கண்டம், கனகரத்தினபுரம் முத்தையன் கட்டு |
| 36. | சிவலிங்கம் மேகலராஜ் | மே/பா க.குலசேகரம், ஆ.பகுதி, இல:185,தேவிபுரம் |
| 37. | அன்னலிங்கம் நிதிபன் | இல:15, பரமநாதன், கஸ்தூரியார்வீதி, 185/1, கிளினிக் ஒழுங்கை, யாழ்ப்பாணம். |
| 38. | மகாதேவன் கவீந்திரன் | மே/பா இ.குமுதினி, இல:589 7 ஆம் யுனிற் தர்மபுரம். |
| 39 | புஸ்பராசா தவராசா | மே.பா பு.தவராசா, திலக்கண்ணாச்சி குடியிருப்பு, கைவேலி, புதுக்குடியிருப்பு. |
| 40 | செல்வரட்ணம் இளங்கோ | புதியபுன்னை நீராவியடி, இல:263, விசுவமடு |
| 41. | ஆறுமுகம் கலைச்செல்வி | மே/பா கு.கணேசன், இல:02, தொப்பிகடை, கல்மடுநகர், கிளிநொச்சி. |
| 42. | கணபதிப்பிள்ளை விஜயன் | மே/பா வ.கணபதிப்பிள்ளை, 2ஆம்வட்டாரம், முள்ளியவளை. |
| 43 | மார்க்கண்டு கேதீஸ்வரன் | இல:301, பாரதிநகர், யோகபுரம், மல்லாவி. |
| 44. | இராசதுரை தவச்செல்வி | இல:18, ஸ்கந்தபுரம், கிளிநொச்சி. |
| 45 | செல்லத்துரை சுரேஸ் | இல:41சிவநகர், உருத்திரபுரம். |
| 46. | திருநாவுக்கரசு பவனேந்திரன் | செஞ்சுடர் குடியிருப்பு, கைவேலி, சோபனா கடை, புதுக்குடியிருப்பு, |
| 47. | கிருஸ்ணமூர்த்தி குகன் | மங்கைகுடியிருப்பு, மல்லாவி, தமிழீழமாவட்ட நீதிமன்றம், மல்லாவி. |
| 48. | சுப்பிரமணியம் குணரத்தினம் | சிவகாமி அம்மன் கோவிலடி, காரைநகர். |
| 49. | சரவணமுத்து சிவானந்தன் | க.சரவணமுத்து, சுதாவீதி, சுதந்திரபுரம் சந்தி, உடையார்கட்டு. |
| 50. | சாமித்தம்பி சிவகுமார் | திலக்கண்ணாச்சி குடியிருப்பு, கைவேலி, புதுக்குடியிருப்பு. |
| 51. | தனபாலசிங்கம் ராஜகாந் | த.ராஜகாந்/குட்டி, செந்தமிழன் குடியிருப்பு, புதுக்குடியிருப்பு. |
| 52. | கனகசேகரம்பிள்ளை சந்திரசேகரன் | க.சந்திரசேகரன், மே/பா திருமதி.செந்தில்குமரன், நீர்ப்பாசனத்திணைக்களம், வவுனிக்குளம், மாங்குளம். |
| 53. | கனகரட்ணம் கமலதாஸ் | நவாலிதெற்கு, மானிப்பாய், யாழ்ப்பாணம். |
| 54. | சங்கரப்பிள்ளை பிரபாகரன் | ச.பிரபாகரன், மே/பா சி.தவமணி, முதலாம் வட்டாரம், முள்ளியவளை, முல்லைத்தீவு. |
| 55. | நவரத்தினம் நாகசீலன் | சிறாப்பர்தோட்டம், வற்றாப்பளை, முள்ளியவளை. |
| 56. | குலசேகரன் குலமோகன் | இலங்கை செஞ்சிலுவைச்சங்கம், ஸ்கந்தபுரம், கிளிநொச்சி. |
| 57 | சோமசுந்தரம் கஜேந்திரன் | இல:150, உதயநகர் மேற்கு, உதயநகர், கிளிநொச்சி. |
| 58. | பாலன் மாரிமுத்து | உடையார்கட்டு தெற்கு, உடையார்கட்டு. |
| 59. | ரத்தினம் மாரிமுத்து | தணிகைமாறன் குடியிருப்பு, தேராவில், விசுவமடு. |
| 60. | இராமையா கஜமோகன் | இல:136, பாண்டியன்குளம், வவுனிக்குளம். |
| 61. | பிச்சை மகேந்திரன் | மடு,சின்னப்பண்டிவிரிச்சான், மன்னார். |
| 62. | சிவஸ்கந்தா சசிதரன் | வைரவர் கோவிலடி, கே.கே.எஸ் வீதி மல்லாகம். |
| 63. | இலங்கநாதன் செல்வராஜ் | இல:72, அருள்கடை, பெரியபண்டிவிரிச்சான், மடு, மன்னார். |
| 64 | ஜயநாதன் சிவகுமார் | செல்வாநகர், கிளிநொச்சி. |
| 65. | சின்னப்பன் அந்தோனிசாமி | ஆரோக்கியபுரம், அக்கராயன் |
| 66. | செல்லத்துரை சசிகுமார் | சொர்னபுரி, அடம்பன், மன்னார். |
| 67. | வளர்மதி | சங்கத்தார் வயல், இயக்கச்சி. |
| 68. | பொன்னையா தர்மகுமார் | 7ஆம் வட்டாரம், குமுழமுனை, முல்லைத்தீவு, |

நிதித்துறை,
தமிழீழ விடுதலைப்புலிகள்,
தமிழீழம்.

(6188)

# பொருளாதார உறவுக்கு உத்வேகம் அளிப்பது மன்மோகன்சிங்கின் அமெரிக்க பயணநோக்கமாகும்

## –ஷியாம் சரன்

(புதுடில்லி)

பிரதமர் மன்மோகன்சிங் மேற்கொண்டுள்ள அமெரிக்கப் பயணத்தின் முக்கிய நோக்கம் இந்தியா-அமெரிக்கா இடையே பொருளாதார உறவுகளுக்கு உத்வேகம் அளிப்பதுதான் என்று வெளியுறவுத் துறைச்செயலர் ஷியாம்சரன் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் வோஷிங்டனில் செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். இரு நாட்டுத் தொழிலதிபர்களின் கூட்டமைப்பு உருவாக்கப்படவுள்ளது.

இதன் மூலம் இந்தியாவில் அமெரிக்காவின் முதலீடும் இரு தரப்பு வர்த்தகமும் அதிகரிப்பதோடு இதரபொருளாதார உறவுகளைப் பலப்படுத்தவும் வழிவகைகாணப்படுமென்றும் அவர் கூறினார்.

முப்பது ஆண்டுகளுக்கு முன் இந்தியா மேற்கொண்ட அணு வெடிப்புசோதனையையடுத்து விதிக்கப்பட்ட தடைநீக்கப்பட்டு தற்போது தாரபுர புதிய அணுமின் நிலையத்திற்கு எரிபொருள் வழங்க அமெரிக்கா ஒப்புக் கொண்டுள்ளதாகவும் ஷியாம்சரன் கூறினார்.

# திருப்பதிகோவில் வாசலில் குண்டு துளைக்காத கண்ணாடி

திருப்பதி ஏழுமலையான் கோவிலில் தற்போது பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. தீவிரவாதிகளின் நடமாட்டம் அதிகரித்ததைத் தொடர்ந்து கோவிலில் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது. ஏழுமலையான் கோவில் மலைப் பாதையிலும் கூடுதல் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

திருப்பதிகோவில் வாசலில் குண்டு துளைக்காத கண்ணாடி அமைக்கப்படுகிறது. திருப்பதிகோவிலுக்கு மத்திய பொலிஸ் படைப் பாதுகாப்பும் போடப்படவுள்ளது என்று பொலிசார் தெரிவித்துள்ளனர்.

# புகையிரதத்தில் தீ விபத்து; ஒருவர் பலி; 153 பேர் தப்பினர்

கோவையில் இருந்து சென்னை சென்ற புகையிரதத்தில் நேற்று ஏற்பட்ட தீ விபத்தில் இளைஞர் ஒருவர் பலியானார். 153 பயணிகள் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பியுள்ளனர். இச் சம்பவம் தொடர்பாக தெரிய வருகையில், நேற்று முன்தினம் இரவு 10.00 மணிக்கு சென்னையில் இருந்து கோவைக்குப் புறப்பட்ட புகையிரதத்தில் நேற்று அதிகாலை 5.40 மணிக்கு தீப்பிடித்துள்ளது. இதன் போது கழிவறைக்குள் இருந்த இளைஞர் ஒருவர் உடல் கருகிப் பலியானார். புகையிரதப் பெட்டி ஒன்றில் பரவ ஆரம்பித்த தீயினை அடுத்து புகையிரதம் நிறுத்தப்பட்டு பயணிகள் விரைவாக இறக்கப்பட்டதால் அதிலிருந்த 153 பயணிகளும் உயிர்தப்பியுள்ளனர்.




## கிளிநொச்சி
## அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானம்

### அறிவித்தல்

கிளிநொச்சி அருள்மிகு கந்தசுவாமி ஆலயப் பொதுக் கூட்டம் விரைவில் நடக்கவிருப்பதனால் அங்கத்தவர்கள் தமது அங்கத்துவத்தை புதுப்பிக்குமாறும் புதியதாகச் சேரவிரும்பும் அங்கத்தவர்கள் எமது காரியாலயத்தில் தொடர்பு கொண்டு சேருமாறும் தயவாகக் கேட்டுக் கொள்கின்றோம்.

சி.சிவானந்தம்,
பொருளாளர்.

(சி.12339)

செ.செல்வரத்தினம்,
செயலாளர்.



## 14 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலராக
28
03
1972



விதையாக
20
07
1991

## வீரவேங்கை தர்சினி
(அருளம்பலம்–ரஞ்சினி)
ஆ.க.வெ.தாக்குதல்



ஈழமண்ணின் விடிவுக்காக
எழுந்திட்ட புலிமகளே!
சமர்பல செய்து–நீ
சாதனைகள் படைத்தாய்,
ஆகாயக் கடல் வெளியில்
ஆனையிறவு மீட்புக்காக,
வீரமுடன் போராடி
வித்தாக விழுந்தாய்,
உன் கனவு இன்று
நனவாகி விட்டதம்மா!
அழிந்தது கண்டோம்.
ஆனையிறவு படைத்தளம்
பறந்தோடி விட்டதம்மா
பதினான்கு ஆண்டுகள்
பசுமையாய் எம் நெஞ்சில்
என்றும் உன் நினைவுகள்.



முகவரி:-
இல,52D:10,
உருத்திரபுரம்.

(6373)

தகவல்:-
குடும்பத்தினர்.



# கண்ணீர் வணக்கம்

## அமரர். நடராசா ஸ்ரெலா

தமிழீழ வைப்பகப் பணியாளர் திரு.ந.தயாந்தன் அவர்களின் தாயார் திருமதி. நடராசா ஸ்ரெலா அவர்கள் 19.07.2005 அன்று கிளிநொச்சியில் இயற்கை எய்தியதையிட்டு எமது கண்ணீர் அஞ்சலியை தெரிவித்துக்கொள்கிறோம். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

பணிப்பாளர், பணியாளர்கள்,
தமிழீழ வைப்பகம்.

(சி-12341)



# கேள்வி அறிவித்தல்

## பிரதம எந்திரி அலுவலகம்,கட்டடங்கள் திணைக்களம் (மாகாணம்) கிளிநொச்சி

01.கீழ்வரும் வேலைகளுக்கான கேள்விகள் கிளிநொச்சி கட்டடங்கள் திணைக்கள பிரதமஎந்திரி அலுவலக கேள்விச்சபையால் 2005ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 10 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 10.00 மணிவரை கிருஸ்ணன்கோவில் வீதியில் உள்ள கிளிநொச்சி கட்டடங்கள்திணைக்கள பிரதம எந்திரி அலுவலகத்தினால் அலுவலக நேரத்தில் ஏற்றுக்கொள்ளப்படும். பெறப்பட்ட கேள்விகள் உடனடியாக எமது அலுவலகத்தினால் திறக்கப்படும். கேள்வி கோருபவர் அல்லது அவரால் முறைப்படி அங்கீகாரம் அளிக்கப்பட்ட பிரதிநிதி ஒருவர் கேள்விகள் திறக்கப்படும் போது சமுகமளிக்கும்படி அறிவுறுத்தப்படுகின்றனர்.

02.நிர்மாணப்பயிற்சி நிறுவத்தினால் இக்ராட் (ICTAD) கட்டடங்கள் நிர்மாணிப்பதற்குக் கீழே குறிக்கப்படும் தரவுகளையுடைய அல்லது அதற்கு மேற்பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்கள் மட்டும் கேள்விப்பத்திரங்கள் கோருவதற்கு தகுதியுடையவராவர்.

03. ஒப்பந்தப்பத்திரங்களைப் பெறுவதற்கு முன்னர் நிர்மாணிபயிற்சி நிறுவனத்தினால் வழங்கப்படும்,இற்றைவரை செய்யப்பட்ட வேலைகளின் விபரங்கள் அடங்கியதுமான பதிவுப்புத்தகத்தை, கிருஸ்ணன்கோவில் வீதியில் உள்ள கிளிநொச்சிக் கட்டடங்கள்திணைக்கள பிரதம எந்திரி அவர்களிடம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

04. தகுதியுடையோர் மட்டும் உரிய கேள்வி வைப்புப்பணத்தை கிருஸ்ணன்கோவில் வீதியில் உள்ள கிளிநொச்சிக் கட்டடங்கள்திணைக்கள பிரதம எந்திரி அலுவலகத்தில் செலுத்தி பற்றுச்சீட்டைப்பெற்று, கேள்விப்பத்திரங்களை 2005ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 03 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 3.00 மணிவரை நிறைவேற்று எந்திரி அலுவலகம், கட்டடங்கள் திணைக்களம், முல்லைத்தீவில் பெற்றுக்கொள்ளலாம்.

| இல | வேலை விபரம் | பதிவு செய்யும் தரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப் படாத கேள்வி வைப்புப்பணம் |
|---|---|---|---|---|
| 01 | நிர்மாணம்–மண்டபம்கட்டம் I,இனிய வாழ்வு இல்லம்,வள்ளிபுனம். | M-7 | 26,000. 00 | 500. 00 |
| 02 | நிர்மாணம்–ஆரம்பசுகாதார நிலையமும்,விடுதியும் கற்சிலைமடு | M-7 | 34,800. 00 | 500. 00 |
| 03 | நிர்மாணம்–குடும்பநல மாதுக்கான விடுதிதரம் IIIபுதுக்குடியிருப்பு | M-7 | 20,800. 00 | 500. 00 |
| 04 | முட்கம்பி வேலியமைத்தல் மத்தியமருந்தகமும், மகப்பேற்று மனையும், நட்டாங்கண்டல் | M-9 | 750. 00 | 100. 00 |
| 05 | முட்கம்பிவேலியமைத்தல் மாவட்ட வைத்தியசாலை, முல்லைத்தீவு. | M-9 | 2,000. 00 | 250. 00 |
| 06 | சுற்றுமதில் அமைத்தல், மத்தியமருந்தகம்,துனுக்காய் | M-9 | 1,750. 00 | 100. 00 |
| 07 | திருத்தவேலை–அம்புலன்ஸ் கராஜ் மத்திய மருந்தகமும் மகப்பேற்று மனையும், நட்டாங்கண்டல் | M-9 | 2,000. 00 | 250. 00 |
| 08 | திருத்தவேலை–அம்புலன்ஸ் கராஜ் மத்திய மருந்தகம், ஒட்டுசுட்டான் | M-9 | 3,000. 00 | 250. 00 |
| 09 | திருத்தவேலையும்– அம்புலன்ஸ் கராஜ் மத்திய மருந்தகம், மாங்குளம் | M-9 | 2,000. 00 | 250. 00 |
| 10 | திருத்தவேலை– மத்திய மருந்தகமும், மகப்பேற்றுமனையும் முள்ளியவளை | M-9 | 4. 000. 00 | 250. 00 |
| 11 | திருத்தவேலை–கிராமிய வைத்தியசாலை, புதுக்குடியிருப்பு | M-9 | 6,000. 00 | 250. 00 |
| 12 | திருத்தவேலை–மாவட்டவைத்தியசாலை புதுக்குடியிருப்பு | M-9 | 6,000. 00 | 250. 00 |
| 13 | திருத்தவேலை–சிறுவர்களுக்கான விடுதிகள், இல. 02, சமையலறை,சுற்றயல் கூறு ,மல்லாவி. | M-9 | 4,000. 00 | 250. 00 |
| 14 | திருத்தவேலை–மத்தியமருந்தகம்,துனுக்காய் | M-9 | 3,000. 00 | 250. 00 |
| 15 | திருத்தவேலை –மத்தியமருந்தகம், அளம்பில் | M-9 | 3,000. 00 | 250. 00 |
| 16 | திருத்தவேலை–விவசாய போதனாசிரியர் விடுதி, குமுழமுனை | M-9 | 2,500. 00 | 250. 00 |

05.கேள்வி கோருபவர் ஒருவருக்கு ஒரு வேலைக்கு ஒரு தொகுதி ஆவணங்கள் மட்டுமே விநியோகிக்கப்படும்.

06.கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சிக்கலாம். மேலதிக விபரங்களை முல்லைத்தீவு, கட்டடங்கள் திணைக்கள நிறைவேற்று எந்திரி அவர்களிடமிருந்து வேலை நாட்களில், அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

எந்திரி சு. சுந்தரகுமார்,
பிரதம எந்திரி,
கட்டடங்கள் திணைக்களம் ,
கிளிநொச்சி.

(சி.12340)

## தாச்சி, கிரிக்கெட் போட்டிகளுக்கு கழகங்களிடமிருந்து விண்ணப்பம் கோரல்

கிளிநொச்சி மாவட்ட விளையாட்டு அபிவிருத்திச் சங்கத்தால் நடாத்தப்படவுள்ள கிரிக்கெட், தாச்சிப் போட்டிக்கான விண்ணப்பங்கள் விளையாட்டுக்கழகங்களிடமிருந்து கோரப்பட்டுள்ளன.

மேற்படி சுற்றுப்போட்டிக்கான விண்ணப்பங்கள் தமிழீழ விளையாட்டுத்துறையில் பதிவு செய்யப்பட்ட கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட விளையாட்டுக்கழகங்களிடமிருந்து கோரப்படுகின்றன.

இவ்விண்ணப்பங்களை இம்மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்குமாறும், விண்ணப்பங்களை தலைவர், செயலாளர் கிளிநொச்சி மாவட்ட விளையாட்டு அபிவிருத்திச் சங்கம், விளையாட்டுத்துறை நடுவப்பணியகம், மருதநகர் கிளிநொச்சி என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறும் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

ஒரு கழகத்தில் இருந்து ஒரு அணி பங்குபற்றலாம் எனவும் இவ் அணியின் விண்ணப்பம் பெயர்ப்பட்டியலுடன் மாவட்ட விளையாட்டுத்துறைப்பொறுப்பாளரின் உறுதிப்படுத்தலுடன் ஒப்படைக்க வேண்டும் எனவும், போட்டிக்கு விளையாட்டுத்துறையின் அடையாள அட்டை சமர்பிக்க வேண்டும் எனவும் கோரப்படுகின்றது.



பாடசாலைகளுக்கிடையிலான மாகாணமட்ட மெய்வல்லுநர் போட்டி கடந்த 16 ஆம் திகதி வவுனியா யூ.சி. விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. இதில் கிளி.அக்கராயன் மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த சீவரத்தினம் தாரணி 17 வயதுக்கீழ்ப்பட்டோர் பிரிவில் குண்டெறிதல், தட்டெறிதல், ஈட்டியெறிதல் ஆகிய போட்டிகளில் முதலிடம்பெற்று பாடசாலை களுக்கான மாகாணமட்ட மெய்வல்லுநர் போட்டியில் வீராங்கனையாகத் தெரிவு செய்யப்பட்டார்.

## மைதானம் புனரமைப்பு

(அலுவலக செய்தியாளர்)

உருத்திரபுரம் உழவர் ஒன்றிய விளையாட்டுக்கழகத்தினரின் விளையாட்டுமைதான புனரமைப்புப்பணிகள் தற்போது மேற்கொள்ளப்பெற்றுவருகின்றன.

உருத்திரபுரம் கூழாவடிப்பகுதியினைச் சூழவுள்ள கிராம உழவு இயந்திர உரிமையாளர்களின் உதவியுடன் 650 பெட்டி மண் பறிக்கப்பெற்று மைதான சமப்படுத்தல் வேலைகள் துரிதமாக இடம்பெற்று வருகின்றன. இதற்கென தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினால் 25 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளதுடன், மேலும் புலம்பெயர்ந்து வெளிநாட்டில் தங்கியுள்ள உழவர் ஒன்றிய விளையாட்டுக்கழக அங்கத்தவர்களின் பணவுதவியும் கிடைக்கப்பெறவுள்ளதெனவும்.




மேற்படி மைதான செப்பனிடும் பணிக்கு ஒரு இலட்சத்து எண் பதாயிரம் ரூபா தேவையெனவும் உழவர் ஒன்றிய விளையாட்டுக்கழகத்தினர் தெரிவித்துள்ளனர். (சோ)

## -பரு. உதைபந்தாட்ட லீக்கின்- கால்பந்தாட்டப்போட்டியின் இன்றைய நாளைய போட்டிகள்

தமிழீழ விளையாட்டுத்துறை ஆதரவில் பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் நடாத்தும் ஒன்பது பேர் பங்குகொள்ளும் விலகல் முறையிலான கால்பந்தாட்டப்போட்டி வதிரிபொமேர்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றுவரும் இன்றைய போட்டியில் பிற்பகல் 2.30 மணிக்கு உரும்பிராய் சென்மைக்கல் விளையாட்டுக்கழகம் எதிர் கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகம், பிற்பகல் 4.30 மணிக்கு கலட்டி ஐக்கிய விளையாட்டுக்கழகமும் எதிர் வலிகாமம் றெட்றேஞ்சர் விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளன.

நாளைய போட்டியில் 3.30 மணிக்கு தேவராளி யங்லயன்ஸ் விளையாட்டுக்கழகம் எதிர் நவசக்தி விளையாட்டுக்கழகமும், 4.30 மணிக்கு வல்லை கருணாகரன் விளையாட்டுக்கழகம் எதிர் கல்வளை விநாயகர் விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளன. (கீ)

## ~தேசிய கனிஷ்ட மெய்வல்லுநர் போட்டி~ 400 மீற்றர் ஓட்டப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்ற நிறஞ்சனிற்குப் பாராட்டு!

(முல்லைத்தீவு)

தேசிய கனிஷ்ட மெய்வல்லுனர் விளையாட்டுப் போட்டியில் முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்து கலந்துகொண்டு 400மீற்றர் ஓட்டப்போட்டியில் 48.94 செக்கனில் ஓடி முதலாம் இடத்தைப் பெற்று கொரியா செல்லவுள்ள புதுக்குடியிருப்பு மத்தியகல்லூரி மாணவன் சகாயரட்ணராஜா- நிறஞ்சனின் சாதனையைப் பாராட்டி முல்லை. மாவட்ட அரச அதிபர் கௌரவித்தார்.

முல்லை மாவட்ட அரச அதிபர்செயலகத்தில் நேற்று முன்தினம் பிற்பகல் 2.30மணிக்கு உதவி அரச அதிபர் தலைமைப்பீட அதிகாரி செல்வி ப.ஆரணி தலைமையில் ஆரம்பமானது.

வரவேற்புரையினை புதுக்குடியிருப்பு பிரதேச விளையாட்டுதுறை அதிகாரி எஸ்.சுதன் நிகழ்த்தினார்.

பாராட்டுரைகளை முல்லை. மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் செ. முகுந்தன், கடற்புலிகளின் முல்லை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் மா.றங்கன், புதுக்குடியிருப்பு மத்தியகல்லூரிஅதிபர் சிவலிங்கம்,புதுக்குடியிருப்பு உதவி அரச அதிபர் செ.தயானந்தா, முல்லை. மாவட்ட உதைபந்தாட்ட சம்மேளனத் தலைவர் வே.சிவனடியார், அறிவுக்கதிர் சஞ்சிகை ஆசிரியர் ரா.கலியுகவரதன், ஆகியோர் நிகழ்த்த கௌரவிப்பு உரையினை வழங்கி அன்பளிப்பாக ரூபா 10 ஆயிரத்தினையும் முல்லை. மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் வழங்கினார்.

தொடர்ந்து போறூட் நிறுவன இணைப்பாளர் குணாளன் ரூபா20 ஆயிரம்அன்பளிப்புச் செய்தார்.

நன்றியுரையினை இந்த வீரனுக்கு விளையாட்டுப் பயிற்சியினை வழங்கிய முல்லை. மாவட்ட விளையாட்டுத்துறை பயிற்சியாளர் முகுந்தன் வழங்கினார்.

இந்த கௌரவிப்பு நிகழ்வில் நிறஞ்சனின் பெற்றோர் அரச அதிபர், பணியாளர், உதவி அரசஅதிபர்கள் மத்தியகல்லூரி அதிபர் விளையாட்டுத்துறை அதிகாரி எனப் பலர் கலந்து கொண்டனர். (20)

## ஹெப்கின்ஸ் அதிர்ச்சித் தோல்வி

உலக மிடில் வெயிட் சம்பியன் பட்டத்துக்கான குத்துச்சண்டைப் போட்டி அமெரிக்காவில் உள்ள லாஸ்வேகாசில் நடந்தது. இதில் அமெரிக்காவைச் சேர்ந்த 26 வயதான ஜெர்மைன்டெய்லர், சக நாட்டு வீரரான 40 வயது பெர்னார்ட் ஹெப்கின்சுடன் மோதினார். இருவரும் சரமாரியாக குத்துக்கள் விட்டனர்.

12 சுற்றுக்கள் முடிவில் இரண்டு நடுவர்கள், டெய்லர் 115-113 என்ற கணக்கில் வென்றதாக அறிவித்தனர். மற்றொரு நடுவர் ஹெப்கின்ஸ் 116-112 புள்ளிகள் பெற்றதாகக் கூறினார்.

1993ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஹெப்கின்ஸ் பெற்ற முதல் தோல்வி இதுவாகும். டெய்லர் 2000ஆம் ஆண்டில் சிட்னியில் நடந்த ஒலிம்பிக் போட்டியில் வெண்கலப்பதக்கம் வென்றவர் ஆவார்.

## உப்புமாவெளி இடைத்தங்கல் முகாமில் சிறுவர் விளையாட்டு மைதானம் திறப்பு

(அலுவலக செய்தியாளர்)

இளையோர் செயற்பாட்டு நிறுவனமும், சிறுவர் பாதுகாப்பு நிதியமும் இணைந்த செயற்திட்டத்தின் கீழ் சுனாமியால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கான விளையாட்டு மைதானம் அமைத்துக்கொடுக்கும் திட்டத்தின் கீழ் முல்லை மாவட்டத்தில் கடந்த வியாழனன்று பிற்பகல் 4.00 மணிக்கு உப்புமாவெளி, இடைத்தங்கல் முகாமிற்கான சிறுவர் விளையாட்டு மைதானம் வைபவரீதியாகத் திறந்துவைக்கப்பட்டது.

விளையாட்டுத்தலைவர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வின் முதல் நிகழ்வாக பொதுச்சுடரினை முகாம் தலைவர் ச.பிரதீபன் ஏற்றிவைத்தார். இதனைத் தொடர்ந்து தேசியக்கொடியினை உதைபந்தாட்ட லீக்கின் முல்லை மாவட்டத் தலைவர் கே.சிவனடியார் ஏற்றிவைத்தார். இதனைத்தொடர்ந்து அகவணக்கம் நடைபெற்றது.

அதனைத் தொடர்ந்து விளையாட்டு மைதானத்திற்கான பெயர்ப்பலகையினை கே.சிவனடியார் திரைநீக்கம் செய்து வைக்க மைதானத்தினை இளையோர் செயற்பாட்டு நிறுவன திட்டமுகாமையாளர் எஸ்.ஜீவா நாடாவை வெட்டித் திறந்து வைத்தார். விளையாட்டு உபகரணங்களை முல்லைத்தீவு உதைபந்தாட்ட மத்தியஸ்தர் வின்சன் வழங்கி வைத்தார்.

தொடர்ந்து தியோநகர் அளம்பில், செம்மலை வடக்கு, செம்மலை கிழக்கு ஆகிய இடங்களிலும் மைதானங்கள் கையளிக்கப்பட்டன. (கு)

## டேவிஸ் கோப்பை டென்னிஸ் ஹெவிட் அதிர்ச்சித் தோல்வி

டேவிஸ் கோப்பை டென்னிஸ் தொடரில் லேடன் ஹெவிட் அதிர்ச்சித் தோல்வியடைய, ஆர்ஜென்டினாவிடம், அவுஸ்திரேலியா வீழ்ந்தது.

அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரில் டேவிஸ் கோப்பை காலிறுதிப் போட்டி நடந்தது. இதில் அவுஸ்திரேலியா, ஆர்ஜென்டின அணிகள் மோதின. மூன்று போட்டிகளின் முடிவில் ஆர்ஜென்டினா 2-1 என்ற முன்னிலையில் இருந்தது. நான்காவது ஒற்றையர் போட்டி நேற்று முன்தினம் நடந்தது. உலகின் இரண்டாம் நிலை வீரரான அவுஸ்திரேலியாவின் லேடன் ஹெவிட், ஆர்ஜென்டினாவின் நல்பாந்தியனை எதிர்த்து விளையாடினார். 1 மணிநேரம் 54 நிமிடங்கள் நடந்த இப்போட்டியில் நல்பாந்தியன் 6-2, 6-4, 6-4 என்ற செட்களில் ஹெவிட்டை வீழ்த்தினார். இந்த வெற்றியின் மூலம் ஆர்ஜென்டினா 3-1 என்ற முன்னிலையில் அரையிறுதிக்கு முன்னேறியது.

## சட்டம் இயற்ற நியூ. பிரதமர் தயக்கம்!

சிம்பாப்வே நாட்டுக்கு கிரிக்கெட் பயணம் செல்வதை இரத்துச் செய்யும் வகையில் தனிச்சட்டம் இயற்ற மறுத்துவிட்டது நியூசிலாந்து அரசு.

ராபர்ட் முகாபே தலைமையிலான சிப்பாப்வே அரசு, அங்கு வசிக்கும் வெள்ளை இன மக்களைத் துன்புறுத்துவதாக ஐரோப்பிய நாடுகள் குற்றம் சாட்டுகின்றன. சிம்பாப்வே அரசுடன் சகலவித தொடர்புகளையும் துண்டிக்க வற்புறுத்துகின்றன. இந்நிலையில் நியூசிலாந்து கிரிக்கெட் அணி இம்மாத இறுதியில் சிம்பாப்வே பயணம் செல்லவேண்டியுள்ளது, ஆனால் இந்தத்தொடரை இரத்து செய்ய வேண்டுமென நியூசிலாந்து அரசு விரும்புகிறது.

ஆயினும் இந்தக் கோரிக்கையை ஏற்க சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி.,) மறுக்கிறது.நியூசிலாந்து அணி திட்டமிட்டபடி சிம்பாப்வே பயணம் மேற்கொள்ள வேண்டும்.தொடரைப் புறக்கணிக்கும் பட்சத்தில் பல கோடி நஷ்டயீடு கொடுக்க வேண்டுமென எச்சரித்துள்ளது. அதே சமயம் சிம்பாப்வே உடன் விளையாட்டு உட்பட அனைத்து விதத் தொடர்புகளையும் துண்டித்துக் கொள்வதாக நியூசிலாந்து அரசு சட்டம் இயற்றும் பட்சத்தில், இந்தத் தொடரை இரத்துச் செய்யலாமென ஐ.சி. சி., தெரிவித்தது சிப்பாப்வே பய ணத்தை இரத்துச் செய்து தனிச்சட்டம் இயற்றலாமா என நியூசிலாந்தின் டொமினிகன் போஸ்ட்' நாளிதழ் கருத்துக் கணிப்பு நடத்தியது. 53 சதவீத மக்கள் சட்டம் இயற்ற ஆதரவு தெரிவித்துள்ளனர். ஆனாலும் புதிய சட்டம் இயற்ற நியூசிலாந்து அரசு தயங்குகிறது.

## பீற்றர்சன்னின் துடுப்பாட்டத்தை சமாளிக்கத் தயார் – மெக்ராத்

இங்கிலாந்து அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையில் நாளை நடைபெறவிருக்கும் ஆஷஸ் கிண்ண டெஸ்ட் கிரிக்கெட் தொடரில் இங்கிலாந்து துடுப்பாட்ட வீரர்கெவின் பீற்றர்சன்னின் துடுப்பாட்டத்தை சமாளிக்க அவுஸ்திரேலிய அணி தயார் நிலையிலிருப்பதாக அணியின் நட்சத்திரவேகப்பந்து வீச்சாளரான கிளன்மெக்ராத் தெரிவித்துள்ளார். பீற்றர்சன் அவுஸ்திரேலியாவுடனான இருஒருநாள் போட்டிகளிலும் அரைச்சதங்களைப் பெற்றதுடன் அவுஸ்திரேலிய அணிக்கு பெரும் அச்சுறுத்தலை வெளிப்படுத்தினார் அதன் காரணமாகவே அவருக்கு டெஸ்ட்போட்டிகளிலும் வாய்ப்புக்கிட்டியது.


மெக்ராத் மேலும் குறிப்பிடும்போது ஒருநாள் போட்டிகளுக்கு பீற்றர்சன் பொருத்தமான வீரர்என்றும் டெஸ்ட்போட்டியிலும் அந்த திறமையைக்காண விரும்புவதாகவும் குறிப்பிட்டார். பீற்றர்சன் ஒப்சைட் பந்துகளுக்கு முகம் கொடுப்பதில் பலவீனமானவர் என்று கூறும் மெக்ராத் அந்த முறையிலேயே அவருக்கு பந்து வீச வேண்டும் என்றார். ஒருநாள் போட்டிகளில் அவரது ஆட்டத்தை கணிப்பிட்டிருப்பதால் தாம் இப்போது நன்கு திட்டமிட்டிருப்பதாக தெரிவித்த அவர் அணியின் பந்துவீச்சாளர் ஹார்மிசனின் திறனும் இங்கிலாந்து ஆஷஸ் தொடரை கைப்பற்ற உதவும் என்றும் குறிப்பிட்டார்.

## பங்களாதேஷ் அணியின் இந்தியச் சுற்றுலா இன்னும் ஒரு வாரத்தில் முடிவு

பங்களாதேஷ் அணியின் இந்திய சுற்றுப்பயணம் குறித்து இன்னும் ஒருவாரத்தில் முடிவு செய்யப்படும் எனத் தெரிகிறது.

டெஸ்ட் அந்தஸ்து பெற்ற பிறகு பங்களாதேஷ் அணி முதல் முறையாக இந்திய சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ளது. முன்னதாக இந்த அணி கடந்த ஏப்ரலில் இந்தியா வர இருந்தது. அப்போது பாகிஸ்தான் தொடர்இருந்ததால் அந்நாட்டு சுற்றுப்பயணத்தை ஒக்ரோபக்கு ஒத்திவைத்தது. இந்திய கிரிக்கெட்சபையின் தற்போது ஒக்ரோபரிலும் தொடரை நடத்த சிக்கல் ஏற்பட்டது. சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி.) சூப்பர் சீரிஸ் கிரிக் கெட் தொடர் இருப்பதால் இம்முறையும் பங்களாதேஷ் சுற்றுப்பயணம் ஒத்திவைக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

இது குறித்து அந்நாட்டு கிரிக்கெட் சபை தலைவர் அஸ்கர் அலி கூறுகையில், சர்வதேசசபையின் கிரிக்கெட் அட்டவணையின்படி நிறையப் போட்டிகள் இருப்பதாக இந்தியத் தரப்பில் கூறப்படுகிறது. ஆனால் எங்களைப் பொறுத்தவரையில் சுற்றுப்பயணம் மேற்கொள்ள இறுதியான திகதியை முடிவு செய்யுமாறு கேட்டுக்கொண்டுள்ளோம். இதற்கு அவர்கள் சம்மதம் தெரிவித்துள்ளனர். கிரிக்கெட் சபை செயலாளர் எஸ்.கே.நாயர் இன்னும் ஒரு வாரத்தில் முடிவு செய்வதாக உறுதி அளித்துள்ளார். இந்தச் சுற்றுப் பயணத்தை இரண்டு பிரிவுகளாக மேற்கொள்ளவும் தயாராக இருக்கின்றோம்.



## சிந்தனைக்கு

இளமையிலிருந்துதான் முழுமையை வளர்க்க முடியும். முழுமை என்னும் பொழுது, அறிவும் ஆற்றலும் அறநெறிப் பண்புகளும் கொண்ட நிறைவான மனிதவளர்ச்சியையே குறிப்பிடுகிறேன்.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 20.07.2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com

## அபாயத்தில் இருந்து தப்பிக்க....!

யாழ்.குடாநாட்டில் என்றுமில்லாதவாறு குற்றச்செயல்கள் அதிகரித்துச் செல்வதைச் சிறிலங்கா பொலிசாரின் பதிவுகளே வெளிப்படுத்துபவையாக உள்ளன. ஒரு காலத்தில் அமைதிக்கும், சமூகக் கட்டுப்பாட்டிற்கும் பெயர்பெற்றதாக விளங்கிய யாழ். குடாநாட்டில் இன்று சமூக சீர்கேடுகளும், சட்டவிரோத நடவடிக்கைகளும் மலிந்து போய்விட்டமை பெரிதும் கவலையளிக்கும் விடயமே.

அதிலும் குறிப்பாக இக்குற்றச்செயல்களில் பெரும்பாலனவை இளைஞர் சமுதாயத்தில் இருந்தே உருப்பெறுபவையாக உள்ளன.இளவயதில் குடிப்பழக்கம், இளவயது துர்நடத்தைகள், குறைந்த வயதில் திருமணம், இளவயது பாலியல் துஸ்பிரயோகங்கள் என்பன அடிப்படைக் காரணமாகின்றன.

சிறிலங்கா பொலிஸ் நிலையங்களில் இளைஞர்கள் இடையிலான சண்டை,சச்சரவு, அடிதடி என்பனவற்றுடன் இளவயதுக் குடும்பங்களின் தகராறு, பாலியல் பிரச்சினைகள் என்பன முதன்மையானவையாக இடம்பெற்றுள்ளமை சமூக ஒழுங்கும் ஒழுக்கமும் எந்தளவுக்கு மோசமான நிலைக்குச் சென்றது என்பதையே வெளிக்காட்டுவதாயுள்ளது.

இந்த வகையில் யாழ்.குடாநாடு செல்வதற்குப் பல காரணிகள் இருக்கலாம். இதில் முக்கியமானது சிறிலங்கா ஆயுதப்படைகளினதும் – பொலிசாரினதும் ஆக்கிரமிப்பின் கீழ் யாழ். குடாநாடு இருபதாகும். அதாவது சிறிலங்கா ஆயுதப்படைத்தரப்பும் – சிறிலங்காஅரசாங்கமும் இப் பிரதேசத்தைஆக்கிரமிக்கப்பட்ட பகுதியாகவும்,அதனைத் தக்கவைப்பதற்கு எத்தகைய வழிமுறையில் மக்களை இட்டுச் செல்லலாம் என்பது பற்றியுமே சிந்தித்தும், செயற்பட்டும் வருகின்றன.

அதாவது இளைஞர் – யுவதிகளைத் தவறான வழியில் இட்டுச் செல்வதன் மூலம் அவர்களின் சிந்தனை வேறு திசையில் திசை திரும்பிவிடுவதில் தீவிர அக்கறைகட்டுகின்றது.. இளைஞர் – யுவதிகள் சமூக ஒழுக்கம். கட்டுப்பாடு என்பனபற்றில் இருந்து விலகிச் செல்வதற்கு ஏற்றவகையிலான ஒழுங்குகளை மேற்கொள்வதில் அவர்கள் முனைப்புடன் செயற்படுபவர்களாகவுள்ளனர்..

மறுவளத்தில் சமூகக்கட்டுப்பாடு.சட்டவிரோதச் செயற்பாடு ஆகியவற்றில் ஈடுபடுவோரைத் கட்டுப்படுத்தும், தண்டிக்கும் வகையிலான சட்டம் ஒழுங்கை பாதுகாக்கும் நடவடிக்கைகளையும் மேற்கொள்வதில்லை.மாறாக அவர்களுக்கு அதேவழியில் மேலும் ஊக்கம் கொடுப்பவர்களாகவும், தடைகளை அகற்றி விடுபவர்களாகவுமே உள்ளனர்.

ஆனால் தனியாக சிறிலங்கா ஆயுதப்படைத்தரப்போ அன்றி அரசாங்கத்தரப்பினரை மட்டும் தான்குறை கூறிவிட முடியாது. ஏனெனில் யாழ். சமூகத்தின் அறிவு, சிந்தனை எங்கே போயிற்று? சிறிலங்காபடைத்தரப்பின் இலக்கு இதுதான் என்பது தெரிந்த விடயமாக இருக்கையில் இதற்கு ஏற்றவகையில் யாழ். சமூகம் எவ்வாறு செயற்பட முடியும்?

இன்று யாழ். சமூகம் எதிர்நோக்கும் இத்தகைய நெருக்கடிக்கு தற்பொழுது சமுதாயத்தை தாங்கி நின்று வழி நடத்துபவர்களே பொறுப்பேற்க வேண்டும். ஏனெனில், எதிர்கால சமுதாயம் மீது இவர்கள் அக்கறை காட்டாததும், அது குறித்தான தவறான கற்பிதம், நோக்கம் என்பனவற்றைக் கொண்டுள்ளமையுமே இந்நிலைக்குக் காரணமாகும்.

யாழ்.குடாநாட்டில் சிறிலங்கா ஆயுதப் படைத் தரப்பைப்போன்றே வேறொரு விதத்தில் இளைஞர்–யுவதிகளின் சிந்தனைப் போக்கை மாற்ற பொற்றோர்கள் முற்பட்டு நிற்கின்றனர். இதற்காகப் பிள்ளைகளின் சில விரும்பத்தாகத நடவடிக்கைகளுக்கும் இவர்கள் அனுமதி அளிப்பவர்களாகவும் கண்டும் காணதவர்கள் போன்றும் உள்ளனர். அதுமட்டுமன்றி மாணவர் பருவம் உனேஜ் பருவம் ஆகியவற்றில் தேவைக்கதிகமான பணம், வசதி என்பனவற்றையும் வழங்குபவர்களாகவும் உள்ளனர். பெற்றோரிடம் இல்லாது பிறரிடம் இருந்துகூட இளைஞர்கள் சில வசதிகளைப் பெற்றுக் கொள்ளும் வாய்ப்புக்களும் உண்டு.இவை இளைய தலைமுறையைத் தவறான பாதையில் இட்டுச் செல்லக் காரணங்கள் ஆகியுள்ளன.

அத்தோடு இளவயதுத்திருமணங்கள் அதிகரித்துள்ளமையும் அவற்றுக்குக் கிடைக்கும் அங்கீகாரமும்,சமூகத்தில் பல்வேறு நெருக்கடிகளும்,ஒழுக்கக்கேடுகளும்உருவாகக் காரணமாகின்றன. அதாவது முதிர்ச்சியடையாத மனோ நிலையில் செய்யப்படும் திருமணங்கள் சிறிதுகாலத்திற்குள்ளேயே குடும்பச் சச்சரவுகள் தலை துக்கி விடுகின்றன.இதனால் திருமண முறிவுகளும் இதன் பின்னர் தொடரான நெருக்கடிகளும் தோற்றம் பெறுகின்றன.

ஆகையால் இன்று யாழ். குடாநாட்டில் ஏற்பட்டிருக்கும் இந் நெருக்கடியைப்போக்க சமூகமே விழிப்புக்கொள்ளுதல் வேண்டும். சமூகத்திலுள்ள புத்திஜீவிகள்,பெரியவர்கள் இவை தொடர்பான விழிப்புணர்வை எதிர்காலச் சந்தியினர் மத்தியில் ஏற்படுத்தல் வேண்டும். அவ்வாறு இல்லாதுவிட்டால் எதிர்காலத்தில் ஒட்டுமொத்த சமூகமே சீர்கெட்டுப் போவதைத்தவிர்க்க முடியாது போய்விடும்.

# பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து மன்னாரில் நேற்று பொதுமக்கள் பேரணி

இந்தியக் கூட்டரசால் வங்கக் கடலில் மேற்கொள்ளப்படுகிற சேதுக் கால்வாய் திட்டத்தால் மன்னார் கரையோர கடல்வளங்கள் அழிவுக்குள்ளாகும் என்று எதிர்ப்புத் தெரிவித்து நேற்று மன்னாரில் போராட்டம் ஒன்று நடத்தப்பட்டுள்ளது.

யுத்தநிறுத்த புரிந்துணர்வு உடன்படிக்கையின்படி மன்னாரில் பொதுக்கட்டடங்களில் இருந்து இராணுவம் வெளியேறாததைக் கண்டித்தும், மீனவர்கள் மீதான அனுமதிச்சீட்டு கெடுபிடிகளை நீக்க வேண்டும், கரையோரப் பாதுகாப்பு இராணுவ வேலிகளை அகற்ற வேண்டும், மன்னார் பாலத்திற்கு கீழான துறைமுகக் கடற்படையினர் வெளியேற வேண்டும், மன்னார் கடற்றொழி லாளர் கூட்டுறவுச் சங்க சமாச கட்டடத்தில் நிலைகொண்டுள்ள படையினர் வெளியேற வேண்டும் என்பது உள்ளிட்ட பல கோரிக்கை களை வலியுறுத்தி நேற்றைய பேரணி நடைபெற்றது. மன்னார் மாவட்ட மக்களால் முன்னெடுக்கப்பட்ட இந்தப் பேரணி மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் தொடங்கி மன்னார் மாவட்ட அரச அதிபர் பணிமனையை சென்றடைந்தது. அங்குஅரச அதிபர் வெ.விஸ் வலிங்கத்திடம் கண்டன மனுக்கள் கையளிக்கப்பட்டன.(32)

# கிரான் – புலிபாய்ந்தகல் பாலம் ஊடான போக்குவரத்திற்கு இராணுவம் தடை!

மட்டக்களப்பு மாவட்டம் கிரான் - புலிபாய்ந்தகல் பாலம் இராணுவ முன்னணி காவல் நிலையப் பிரதேசம் ஊடாக மாலை 5.30 மணிக்குப் பின்பு பொதுமக்கள் போக்குவரத்திற்கு சிறிலங்கா இராணுவத்தினரால் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக புலி பாய்ந்தகல், திகிலிவட்டை, குடும்பி மலை உட்பட பத்திற்கும் மேற்பட்ட கிராம மக்களும் அப்பகுதியில் விவசாயத்தில் ஈடுபட்டுள்ள விவசாயிகளும் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

கடந்த புதன்கிழமை முதல் இராணுவத்தினரால் அமுல்படுத்தப்பட்டுள்ள இந்நடவடிக்கையானது பல்வேறு தரப்பினராலும் கண்டிக்கப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட விடயம் குறித்து மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ். ஜெயானந்தமூர்த்தி அப்பிரிவிற்குப் பொறுப்பான 232 ஆவது படைப்பிரிவு இராணுவக் கட்டளை அதிகாரி கேணல் ரூபசிங்கவின் கவனத்திற்கு கொண்டு வந்தபோதிலும் எதிர்பார்த்த சாதகமான பதில் கிடைக்கவில்லை.

இரவு 10.00 மணிவரை குறிப்பிட்ட பாதையை திறந்து விடுமாறு பாராளுமன்ற உறுப்பினர் விடுத்த கோரிக்கையை நிராகரித்த இராணுவ அதிகாரி இரவு 7.00 மணி வரை பாதையைத் திறந்து வைத்திருப்பதற்கு அனுமதியளித்துள்ளார்.

# திருமலை புலனாய்வுத்துறை அதிகாரிக்கு இராணுவத் தளபதி இடமாற்ற உத்தரவு

சிறிலங்கா இராணுவத் தளபதியின் உத்தரவிற்கமைய திருகோணமலை படைத் தலைமையக புலனாய்வுத்துறை அதிகாரி இடமாற்றப்பட்டுள்ளார்.

திருகோணமலை 22 ஆவது படைத்தலைமையகத்தின் புலனாய்வுத்துறை அதிகாரியே இராணுவத் தளபதியின் உத்தரவிற்கமைய இடமாற்றப்பட்டுள்ளார்.

கடந்த வாரம் திருமலையில் விடுதலைப்புலி உறுப்பினர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவம் தொடர்பில் இந்த இடமாற்றம் வழங்கப்பட்டிருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தத் தாக்குதல் சம்பவத்துடன் இராணுவப் புலனாய்வாளர்கள் தொடர்புபட்டிருந்ததாக விடுதலைப் புலிகள் குற்றம் சுமத்தியிருந்தனர். இராணுவம் அந்தக் குற்றச்சாட்டை முற்று முழுதாக மறுத்துள்ள நிலையில் திருகோணமலை இராணுவப் புலனாய்வுத்துறை மேஜரை திடீரென இடமாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டமையானது இராணுவத்தினர் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியதுடன் அவர்களின் மனோபலத்தை குலைக்க அது காரணமாக அமையும் எனத் தெரிவிக்கப்படுகிறது

இதேவேளை இராணுவ புலனாய்வுத்துறை அதிகாரிகள் மற்றும் சிப்பாய்களை அவர்களின் புலனாய்வு நடவடிக்கைகள் மற்றும் செயற்பாடுகளிலிருந்து விலக்கி வைப்பதற்கு இராணுவ முக்கியஸ்தர்கள் நடவடிக்கை எடுத்து வருவதாகவும் தகவல்கள் மேலும் தெரிவித்துள்ளன.

# வெடிபொருளை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்காத கான்ஸ்டபிளுக்கு விளக்கமறியல்!

தனியார் காணியொன்றிற்குள் இருந்து கண்டெடுக்கப்பட்ட வெடி பொருட்களை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கத் தவறிய முஸ்லிம் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் பொலிசாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவின் பேரில் எதிர்வரும் முதலாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

அக்கரைப்பற்று பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இவரது வீட்டிற்கு அருகிலுள்ள வளவொன்றிற்குள் விளையாடிக் கொண்டிருந்த சிறுவர்கள் மகசீன்கள்- 8, துப்பாக்கி ரவைகள் 143 மற்றும் படையினர் அணியும் பாதணிகள் ஆகியவற்றைக் கண்டெடுத்து குறிப்பிட்ட பொலிஸ் கான்ஸ்டபிளிடம் ஒப்படைத்துள்ளனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை இவை கண்டெடுக்கப்பட்டு அவரிடம் ஒப்படைக்கப்பட்ட போதிலும் நேற்று முன்தினம் திங்கட்கிழமை முற்பகல் வரை இந்த சான்றுப் பொருட்கள் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்படவில்லை.

இது தொடர்பாக அக்கரைப்பற்று பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கு கிடைத்த தகவலையடுத்து சம்பந்தப்பட்ட பொலிஸ் கான்ஸ்டபிள் நேற்று முன்தினம் மாலை கைது செய்யப்பட்டார்.

அக்கரைப்பற்று நீதவான் ரி.எல்.ஏ. மனாப் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டபோது விளக்க மறியலில் வைப்பதற்கான உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

# மன்னாரில் கைதான த. பு. கழக ஊழியர்கள் பிணையில் விடுதலை!

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் இரண்டு ஊழியர்கள் மன்னாரில் பொலிசாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவின் பேரில் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்கள்.

பெரியான் ஜெயசீலன் (பாலம்பிட்டி), சித்திரன் விஜயகுமார் (பெரியதம்பனை) ஆகிய இருவருமே இவ்வாறு கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை இவர்கள் பயணம் செய்த உந்துருளி பொலிசாரின் சோதனைக்கு உட்படுத்தப்பட்ட போது வாகனம் தொடர்பான உரிய ஆவணங்கள் இவர்களினால் சமர்ப்பிக்கப்படவில்லை.

இதனையடுத்து முருங்கன் பொலிசாரால் இருவரும் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டபோது பிணையில் செல்ல அனுமதித்த நீதிமன்றம் எதிர்வரும் 27 ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டும் என்ற உத்தரவையும் பிறப்பித்துள்ளது.

# சந்திரிகாவின் 3 ஆவது சத்தியப்பிரமாணத்திற்கு

# எந்தவொரு சாட்சியமும் இல்லை

## – ஜீ.எல்.பீரிஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இரண்டாயிரமாம் ஆண்டில் சனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டதன் பின்னர், சனாதிபதி பதவிக்கான சத்தியப் பிரமாணம் செய்தமைக்கான எந்தவொரு சாட்சியமும் இல்லையென ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரும் முன்னாள் அரசியல் யாப்பு விவகார அமைச்சருமான ஜீ.எல்.பீரிஸ் கூறியுள்ளார்.

அரசாங்கம் போர்நிறுத்த உடன்படிக்கைகளைப் பாதுகாக்கத் தவறிவிட்டதாகவும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில்;சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கு சார்பாக முன்வைக்கப்பட்டுள்ள விவாதத்தில் இரண்டாயிரமாம் ஆண்டு சனவரி மாதம் பன்னிரெண்டாம் திகதி அவர் இரண்டாவது தடவையாகவும் சனாதிபதி பதவியைப் பொறுப்பேற்றார் எனக் கூறப்பட்டுள்ளது. ஆனால் இரண்டாயிரமாம் ஆண்டு சனவரி மாதம் 26 ஆம் திகதிக்குப் பின்னதாக அவர் கட்டாயமாகச் சத்தியப் பிரமாணம் செய்யவேண்டி இருந்தது. இந்தச் சத்தியப் பிரமாணம் தொடர்பாக எந்தவொரு சாட்சியமும் இல்லாதது ஏன் எனவும் ஜீ.எல்.பீரிஸ் கேள்வி எழுப்பியுள்ளார்.

இதேவேளை, சனாதிபதி சந்திரிகாவிற்கு முன்னர் சனாதிபதியாகப் பணிபுரிந்தவர்களின் சத்தியப் பிரமாணம் செய்த வர்த்தமானி அறிவித்தல்கள் தன்னிடம் உள்ளதாகவும் சனாதிபதி சந்திரிகாவின் சனாதிபதி பதவி ஏற்பு சத்தியப் பிரமாணம் தொடர்பாக ஏன் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படவில்லை எனவும் அவர் கேள்வியெழுப்பியுள்ளார். அத்துடன் சனாதிபதியின் சத்தியப் பிரமாண வைபவத்தில் கலந்து கொண்டவர்கள் யார்? அது தொடர்பான தினம் எது? ஏன் அதனை இரகசியமாகச் செய்யவேண்டி ஏற்பட்டது? என்ன காரணத்திற்காக இந்த நாட்டின் எந்தவொரு பிரசையும் அது தொடர்பாகத் தெரிந்து கொள்ளவில்லை எனவும் அவர் கேள்வி எழுப்பினார்.

இதேவேளை, போர்நிறுத்தத்தைப் பாதுகாக்க வேண்டியது இன்று முக்கிய தேவையாகி உள்ளதாகவும் அது தொடர்பாக அரசாங்கத்திடம் எந்தவொரு கொள்கையும் இல்லாமையினால் மிகவும் மோசமான நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

# ஊடகங்கள் மீது சந்திரிகா பாய்ச்சல்

இலங்கையிலுள்ள தனியார் ஊடகங்கள் செய்திகளைப் பிழையான வழியில் மொழி பெயர்ப்புச் செய்வதாக சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார். உயர் நீதிமன்றம் பொதுக்கட்டமைப்பை முற்றாகத் தடை செய்யவில்லையெனவும், எனினும் அதிலுள்ள சில சரத்துக்களுக்கே இடைக்காலத் தடையுத்தரவு பிறப்பித்துள்ளதெனவும் சந்திரிகா கூறினார். அநுராதபுரத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய சந்திரிகா குமாரதுங்க இவ்வாறு தெரிவித்தார். இலங்கையிலுள்ள நான்கில் மூன்று சதவீதமான ஊடகங்கள் ஐக்கிய தேசியக் கட்சித் தலைவருடையதும், அவருடைய சொந்தக்காரர்களுடையதாகவும் காணப்படுவதாகவும், அரசியல் தலைவர்கள் ஊடகங்களை தமது கட்டுப்பாட்டின் கீழேயே வைத்திருக்கிறார்களெனவும் தெரிவித்தார்.நாட்டில் மிகவும் முக்கியமான நீதிமன்றமாகக் கருதப்படும் உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பினை சில ஊடகங்கள் திரிபடையச்செய்யும் விதத்தில் செய்தி வெளியிட்டுவருவதாகச் சுட்டிக்காட்டிய சந்திரிகா குமாரதுங்க எனினும், இவ்வாறான நடவடிக்கைகளைக் கண்டு அஞ்சும் தலைவர்கள் எவரும் அரசாங்கத்தில் இல்லையெனவும் கூறினார். கடல்கோள் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்குப் பிரதேசங்களை மீளக் கட்டியெழுப்பும் நோக்கில் தாம் இந்தப் பொதுக்கட்டமைப்பில் கைச்சாத்திட்டதாகவும், எனினும், பொதுக்கட்டமைப்பை உருவாக்கும் தகுதி சந்திரிகாவிற்கு இல்லையெனக் கூறி ஜே.வி.பி போன்ற கட்சிகள்நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருப்பதாகவும் சந்திரிகா தனது உரையில் மேலும் தெரிவித்தார். ஊடகத்துறை அமைச்சர் என்ற ரீதியில் எல்லா வேளையிலும் தான் உண்மையையே கூறிவந்தாகவும் சனாதிபதி அங்கு குறிப்பிட்டார்.

# சிறுமி மீது பாலியல் இம்சை குடும்பஸ்தருக்கு பத்தாண்டு சிறை

(யாழ்ப்பாணம்)

சிறுமியொருவரை பாலியல் இம்சைகளுக்குள்ளாக்கிய குற்றச்சாட்டின்பேரில் குடும்பஸ்தர் ஒருவருக்கு யாழ்.மேல்நீதிமன்றம் பத்தாண்டு கால கடுழிய சிறைத்தண்டனையை வழங்கியுள்ளது.

கடந்த 2002 ஆம் ஆண்டு ஆகஸ்ட்மாதம் மீசாலையிலுள்ள வீடொன்றில் வைத்து அல்லாரை வடக்கைச் சேர்ந்த சிறுமி ஒருவரை மீசாலை கிழக்கைச் சேர்ந்த சபாரத்தினம் விநாயகமூர்த்தி என்பவர் பாலியல் இம்சைகளுக்குள்ளாக்கியதாக யாழ்.மேல்நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டு வந்தது.

இவ்வழக்கின் இறுதிக்கட்ட விசாரணைகள் நேற்று யாழ்.மேல்நீதிமன்றத்தில் நடைபெற்றபோது குற்றம்சாட்டப்பட்ட விநாயகமூர்த்தி மீதான குற்றங்கள் நிரூபணமானதைத் தொடர்ந்து அவருக்கு பத்து ஆண்டு கால கடுழியச் சிறைத்தண்டனை விதித்த யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி சி.வரதராஜா குற்றவாளி மனுதாக்கல் செய்தால் அதற்கு சந்தர்ப்பம் அளிக்கப்படும் என்றும் கூறினார்.

(33)

# புனரமைக்கப்பட்டும் பயனற்ற தெல்லிப்பழை வைத்தியசாலை

(யாழ்ப்பாணம்)

யாழ்.தெல்லிப்பழை வைத்தியசாலை புனரமைக்கப்பட்டு அதன் சொந்த இடத்திலேயே அது மீள இயங்கவைக்கப்பட்டுள்ளபோதும் இவ்வைத்தியசாலை மூலமாக நோயாளர்கள் திருப்திகரமான சேவையைப் பெறமுடியவில்லை என விசனம் தெரிவிக்கப்படுகிறது.

வலிகாமம் வடக்கு இராணுவ அதியுயர் பாதுகாப்பு வலயத்துள் காணப்படும் மேற்படி வைத்தியசாலை தற்போது பல கோடி ரூபா செலவில் புனரமைக்கப்பட்டு வைபவ ரீதியாக இயங்கவிடப்பட்டுள்ளது. எனினும் இந்த வைத்தியசாலை இராணுவ அதியுயர் பாதுகாப்பு வலயத்துள் காணப்படுவதைக் காரணம் காட்டி இரக்கமே அற்ற முறையில் நோயாளர்கள் மீதும் சிறிலங்கா படையினர் தம் சோதனைக்கெடுபிடிகளையும், விசாரணைகளையும், பயணக்கட்டுப்பாட்டு நடைமுறைகளையும் திணித்து வருகின்றனர்.

இந்த நிலைமையைக் காரணம் காட்டியே மேற்படி வைத்தியசாலை மீளியங்க வைக்கப்பட்டும் பயனில்லை என விசனம் தெரிவிக்கப்பட்டுவருகிறது.

(33)

# மனநல சிகிச்சை

புதுக்குடியிருப்பு டாக்டர் பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவமனையில் இங்கிலாந்திலிருந்து வருகை தந்திருக்கும் மனநல சிகிச்சை நிபுணரினால் நாளை வியாழக்கிழமை காலை 8.00 மணி தொடக்கம் மாலை 2.00 மணிவரை மன நல சிகிச்சையும், ஆலோசனையும் வழங்கப்படவுள்ளது. நித்திரை இன்மை, மனச்சோர்வு, நீண்டநாள் தலையிடி, தலை, உடல் விறைப்பு போன்ற பாதிப்பு உள்ளவர்களுக்கு விசேடமாக சிகிச்சை அளிக்கப்படவுள்ளது. பயன்பெற விரும்புவோர் புதுக்குடியிருப்பு டாக்டர் பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவமனையின் வெளிநோயாளர் பகுதியில் தொடர்பு கொள்ளுமாறு மருத்துவமனை நிர்வாகம் தெரிவித்துள்ளது.

## ஆகஸ்...

நிலையை சர்வதேசத்திற்கு வெளிப்படுத்தல் ஆகிய முக்கிய அம்சங்களை வெளிப்படுத்தி தமிழ்த் தேசியப் போராட்டத்தை அடுத்த கட்டத்திற்கு நகர்த்துமாறு கோருகின்ற மக்கள் எழுச்சிநாளை அடுத்த மாதம் நடுப்பகுதியில் கிளிநொச்சி மாவட்டத்தில் நடாத்த முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன.

இந்த மக்கள் எழுச்சிப் பேரணியை நடத்துவதற்குரிய ஒரு செயலணிக் குழுவும் அமைக்கப் பட்டுள்ளது. இச் செயலணிக் குழு மூலம் இந்த வாரம் தொடக்கம் பிரதேசங்கள் தோறும் மக்கள் செயற்பாட்டுக்குழுக்கள் உருவாக்கப்பட்டு தமிழ்த்தேசிய பேரெழுச்சிப் பேரணிகளை உருவாக்க கூடிய செயற்பாடுகள் துரிதமாக்கப்படவுள்ளது.

நேற்றைய இந்தக் கலந்துரையாடலில் தேசிய எழுச்சிப் பேரவைப் பொறுப்பாளர் உமைநேசன், கிளிநொச்சி மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் கலைவாணன், மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் பூவிழி, அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத் தலைவர் கணேசபிள்ளை மற்றும் மாவட்ட ரீதியாக நூற்றுக்கணக்கான பேராளர்கள் கலந்து கொண்டனர். (கு,தீ)

## கைப்பற்றப்பட்ட...

கைப்பற்றப்பட்ட ஒரு குண்டிற்குள் 5000 சைக்கிள் போல்சுகள் இருந்ததாகவும் இந்த குண்டு வெடித்தால் 800சதுர அடி பரப்பிற்கு சேதம் ஏற்படும் என்றும் குண்டு செயலிழக்கச் செய்யும் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

இந்த குண்டுகளை மன்னாருக்கு கொண்டு வருமாறு உத்தரவிட்ட சந்தேக நபர் தப்பியோடிவிட்டதாக தெரிவிக்கப்படுகிறது. இவரைக்கைது செய்வதற்கு விசேட தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்த கிளைமோர் குண்டுகளுடன் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் எதிர்வரும் 29 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

## சட்டவிரோத...

தீர்ப்பளித்த பின்னர் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் செயற்பாட்டினை நீதிபதி கடுமையாக விமர்சித்தார். லஞ்ச ஊழல் ஆணைக்குழு அனைத்துத் தரப்பிடமும் நியாயமாக நடந்து கொள்ள வேண்டும் என்றும், அனைத்து தரப்பில் இருப்பவர்களையும் ஒரே விதத்தில் அணுக வேண்டும் என்றும் குறிப்பிட்ட நீதிபதி சந்தேக நபர்கள் நிரபராதிகள் எனத் தீர்ப்பளித்து. அவர்களை விடுதலை செய்த போதிலும் குற்றச்சாட்டிற்கு நஷ்டத்தை அதன் மூலம் நிவர்த்திக்க முடியாதென்றும் தெரிவித்துள்ளார்.

## வேகமாகப்...

விபத்துச் சம்பவம் நடைபெற்றது. இவ்வாறு விபத்திற்குள்ளாகி நடு வீதியில் தடம் புரண்ட பிறாடோ ரக வாகனம் முற்றாக சேதமடைந்துள்ளது. சம்பவம் இடம்பெற்ற வேளை அதில் சாரதி உட்பட இருவர் பயணித்திருந்தனர். சம்பவத்தின் போது சாரதியுடன் பயணித்துக் கொண்டிருந்த கிளிநொச்சியைச் சேர்ந்த தம்பி அண்ணா என்ற வர்ணப்பூச்சாளர் காயங்களுக்குள்ளாகி கிளி.மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். சாரதி காயங்கள் எதுவும் இன்றி தப்பியுள்ளார்.

மேற்படி விபத்துப்பற்றி வாகன சாரதி தெரிவிக்கையில்:-

கிளிநொச்சியில் இருந்து பரந்தன் நோக்கிச் சென்று கொண்டிருந்தோம். எமக்குப் பின்னால் வந்துகொண்டிருந்த உந்துருளி ஒன்று திடீரென எமது வாகனத்தைக் முந்திச்சென்று சடுதியாக வேகத்தை குறைத்தது. அதனால் எங்கள் வாகனத்தை வீதியின் மறுகரையை நோக்கி திருப்பினேன். அதன் போது வாகனம் வீதியை விட்டு கீழே இறங்கியது. அதன் பின்னர்தான் வாகனம் நடுவீதியில் தடம் புரண்டது என்றார்.

எனினும் சம்பவம் இடம்பெற்ற இடத்தில் குறிப்பிடப்படும் உந்துருளி காணப்படவில்லை. உந்துருளி தலைக்கவசம் மட்டும் இருந்தது. விபத்துக்கான காரணம் தொடர்பான மேலதிக விசாரணைகளை தமிழீழ காவல்துறையின் வீதிப்போக்குவரத்துப்பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர்.

(லோ,தீ)

## ஓமந்தை...

பொறுப்பாளர் ஞானம் அவர்களிடம் முறையிட்டுள்ளனர்.படையினர் புதிய சோதனை நிலையத்தை அமைத்துள்ளமை தொடர்பாக ஞானம் அவர்கள் இலங்கை போர் நிறுத்தக்கண்காணிப்புக்குழுவின் வவுனியா மாவட்ட தலைவர் ஜோனிக்கு அறிவித்தார். ஜோனி அவர்கள் இது தொடர்பாக ஆராய்வதற்காக நேற்று மாலை 3.30 மணியளவில் விடுதலைப்புலிகளின் வவுனியா மாவட்ட அரசியல் துறைச்செயலகத்திற்கு வருகை தந்து அரசியல்துறை பொறுப்பாளர் ஞானம் அவர்களுடன் கலந்துரையாடினர் இதன் போது ஞானம் அவர்கள் புதிய சோதனை நிலையம் அமைக்கப்பட்டு படையினர் மேற்கொண்டு வரும கெடுபிடிகள் உடனடியாக நிறுத்தப்படவேண்டும்,தவறும் பட்சத்தில் மக்கள் எதிர்ப்புப்போராட்டங்களில் ஈடுபடவுள்ளதாக எச்சரித்துள்ளனர் என்பதை ஜோனிக்கு வலியுறுத்திக்கூறினார். இதனைக் கேட்டறிந்த ஜோனி தாம் படையினரின் சோதனை நிலையத்தை பார்வையிடுவதுடன் படையுயர் அதிகாரிகளைச்சந்தித்து கலந்துரையாடிய பின் உரிய நடவடிக்கைதொடர்பாக அறிவிப்பதாகவும் கூறியுள்ளார்.

(10)

## புலிகளின்...

களுக்கு எதிரான கொலைகள் தொடர்பாக இந்த நாடுகள் பெரும் கவலையை வெளியிட்டுள்ளன.

போர்நிறுத்த உடன்படிக்கை சரியான முறையில் சம்பந்தப்பட்ட தரப்பினரால் கடைப்பிடிக்கப்படாமல் போனால் பாரிய எதிர்விளைவுகளை எதிர்நோக்கவேண்டி வரும் என்றும் இந்த நாடுகள் எச்சரித்துள்ளன.

சர்வதேச ரீதியான இந்த சமாதான நடவடிக்கைகளுக்கான ஆதரவு கேள்விக்குரியதாகும். அத்துடன் நாட்டிற்குக் கிடைக்கும் சர்வதேச உதவிகள் கிடைக்காமல் போகும். அரசாங்க கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் ஆயுதமற்ற தமிழீழ விடுதலைப் புலிகளின் பாதுகாப்புக்கு அரசாங்கம் பாதுகாப்பு உத்தரவாதம் வழங்க வேண்டும் என அமெரிக்க தூதரகம் வலியுறுத்தியுள்ளது.

போர்நிறுத்த உடன்படிக்கைக்கு அமைய அரசாங்கம் ஏனைய ஆயுதக்குழுக்களின் ஆயுதங்களை களைவதன் மூலம் அவர்களால் மேற்கொள்ளப்பட்டுவரும் பாரிய வன்முறைகளைத் தடுக்க முடியும். போர்நிறுத்த உடன்படிக்கையை உரியமுறையில் இருதரப்பினரும் கைக்கொள்வதன் மூலம் இந்த பிரச்சினைக்கு தீர்வை போர் நிறுத்தக்கண்காணிப்புக் குழுவினரின் ஒத்துழைப்புடன் வெற்றிகரமாக முன்னெடுக்கமுடியும்.

நாட்டின் பாதுகாப்பை உறுதி செய்யாமை யுத்தநிறுத்த உடன்படிக்கையை அபாயத்தில் விழச் செய்வதாக அமையும். இதேவேளை யுத்தநிறுத்த உடன்படிக்கை செயல் இழந்து விட்டால் முழுச் சமாதான நடவடிக்கையும் படுபாதாளத்தில் விழுந்துவிடும். அதனால் இதற்கான பல்தேசிய ஒத்துழைப்புக்கள் விலகிச் செல்லலாம். (32)

## கருத்துப்படங்கள்

வாசகர்களிடமிருந்து கருத்துப்படங்கள் வரவேற்கப்படுகின்றன. தரமான கருத்துப் படங்கள் ஈழநாதம் நாளேட்டில் பிரசுரிக்கப்படும்.

அனுப்ப வேண்டிய முகவரி:
பிரதம ஆசிரியர்,
ஈழநாதம், கிளிநொச்சி.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம்' பணிமனையில் 2005 ஆம் ஆண்டு யூலை மாதம 20 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.